ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 9

ஐப்பசி 1–31 2021

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

எம்மவர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம்...

நாங்கள் - 9, ஐப்பசி மாத இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. நாங்கள் பத்திரிகை கடந்த 9 மாதங்களாக தனது ஆவணப்படுத்தல் சேவையை செய்து வருகின்றது. உங்கள் அனைவரினதும் கூட்டிணைவுடன் நாங்கள் தொடர்ந்து பயணித்து வருகின்றோம். ஈழத்தில் வடபுலத்தில் அமைந்துள்ள எல்லாச்சிறப்புகளும் பெற்ற எமது கிராமத்தவர்கள் கல்வியால் தான் எங்கும் அசைக்க முடியாதவர்களாக விளங்குகின்றோம். இன்றைய காலத்தில் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அரச உத்தியோகம் பார்ப்பவர்களே மிகுந்த கஷ்டத்துடன் தான் வாழுகின்றார்கள். அவ்வாறு நோக்குகின்றபோது தினக் கூலிகளின் பாடு பற்றி நாம் சொல்லி விளங்கப்படுத்த வேண்டியதில்லை. கற்று பல்கலைக்கழகம் சென்றால் தான் நல்ல தொழிலைப் பெற முடியும், எதிர்கால வாழ்வை சிறப்பானதாக அமைக்க முடியும். பிள்ளைகளை பாடசாலைக்கு, தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்பினால் மட்டும் போதாது அவர்களது கற்றலை பெற்றோர்கள் மிக கரிசனை யுடன் அவதானித்து வருதல் வேண்டும். எமது கிராமத்தவர் களுக்கென நல்ல பல பண்புகளும், திறமைகளும் உண்டு. அதை என்றும் நாம் சிதைய விடாது பேணிப்பாதுகாக்க வேண்டும். மது, போதைபொருள், சிகரெட் என நமது வடபுலம் மிக வேகமாக சீரழிந்து வருகின்றது. கட்டிளமைப்பருவத் தினரிடம் இந்த தீய பழக்கம் இலகுவில் பற்றிக் கொள்ளக் கூடியது. இது தொடர்பாக நாம் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும். பொது இடங்களை குறிப்பாக கோயில் வீதிகள், மைதானங்கள், காணிகள் என்பவற்றை தீய செயல்களுக்கு பயன்படுத்த அனுமதியாது குறித்த நிறுவனங்கள், காணி களுக்கு சொந்தமானவர்கள் சிரத்தையுடன் செயற்பட வேண்டும். நமது ஊருக்கென்று உள்ள பெயரை நாம் அனைவரும் பாதுகாப்பதில் சிரத்தை எடுக்க வேண்டும். போதை வன்செயல்களை தூண்டும், நிகழ்வுகளை குழப்பும், கெட்ட எண்ணத்தை உருவாக்கும் என்பதை யாரும் மறந்து விடாதீர்கள். நாம் அனைவரும் குறித்த மேற்சொன்ன விடயத்தில் கவனமற்று இருப்போமானால் எம் எதிர்கால சந்ததியினரை தொலைத்து விடுவோம் என்பதை மறந்து விடாதீர்கள். எமது ஊரில் சீவல் தொழில் செய்த 95 வீதமானவர்கள் குடித்தது இல்லை. தொழிலாகவே மேற் கொண்டார்கள். அதனால் தான் நாம் இன்றும் எல்லோரும் போற்றும் ஆளுமைகளாக தலைநிமிர்ந்து நிற்கிறோம் என்பதை மறந்து விடாதீர்கள்...

- க.பரணீதரன்

## உள்ளே...




1. ஆன்மிகப்பற்றாளரும் நற்பண்பும் உடைய
அமரர் உயர்திரு மயிலு சிவானந்தன்



2. எமதூர் முதன்மை நகைச்சுவைக் கலைஞர்களில் ஒருவர்
நல்ல மனிதர் ஏரம்பு முருகேசு



3. கிளானையின் அருமைராசா
ஆயுர்வேத வைத்தியர் கதிர்காமு வல்லிபுரம் அவர்கள்



4. சமூக முன்னோடியும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய
அமரர் கதிர்காமு தானியேல் மாணிக்கம்(கே.டி.எம்)



5. நிஜத்திலும் நாடகத்திலும் ஏற்ற பாத்திரத்தை திறம்பட
சிறப்பித்த ஆளுமை செல்லையா யோகதாஸ்

6. அல்வாய் அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை
காத்தவராயர் தேவஸ்தான திருத்தல வரலாறு



7. அஞ்சலி
அமரர் திரு முருகன் குலரத்தினம்
அமரர் திருமதி சிவலோகநாயகி ஆறுமுகம்

8. அதுவொருகாலம் – 8
நொச்சியடி வெட்டையும் கோரைப்புற்களும்


தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com

நல்லதை நினை... நல்லதை பேசு... நல்லதை செய்...

# ஆன்மிகப்பற்றாளரும் நற்பண்பும் உடைய

## அமரர்.உயர்திரு மயிலு சிவானந்தன்

**(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, சமாதான நீதவான், மணிவாசகப்புலவர்)**

■ திருமதி மஞ்சுதா மோகன் - ஆசிரியை ■



அருள்மிகு ஆலடிப்பாலகணபதி யான் வீற்றிருக்கும் அல்வாய்க் கிராமத்தின் மூன்றாம் பனையடியில் வாழ்ந்த அமரர்களான மயிலு சின்னத்தங்கம் தம்பதிகளுக்கு 1939.03.17 இல் ஏக புதல்வனாகப் பிறந்தவர் தான் அமரர் மயிலு சிவானந்தன். நற்பண்பும், நற்பணியும் கொண்ட அமரர் சிவானந்தன் அவர்கள் எமதூருக்காக ஆற்றிய சமூகத் தொண்டுகள், எமதாலயத்துக்கு ஆற்றிய சமயத் தொண்டுகள் முதலானவற்றின் ஊடாக அவர் தனது மண்மீது கொண்ட பற்றினை நாம் அறியலாம். அமரர் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை ஆலயத் தொண்டிற்காகவே அர்ப்பணித்தார். ஆலயத் தொண்டினை மேற்கொள்வதற்காக முறையாக தீட்சை பெற்றே அத் தொண்டினை மேற்கொண்டார் என்றால் அது மிகையாகாது. இவரது இத் தொண்டானது இவரூடாக மட்டும் தோற்றம் பெற்றதன்று இவரது பீட்டன், பேரன், தந்தை என்ற பரம்பரையூடாக தொடர்ந்ததே அமரர் அவர்களின் தொண்டாகும்.

அமரர் சிவானந்தன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை யா/திருஇருதயக் கல்லூரியிலும் கற்று பின் உயர்நிலைக் கல்வியினை யா/மத்திய கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கற்றுத் தேறினார். பாடசாலைகளில் கல்வி கற்ற காலங்களில் பல செயற்பாடுகளில் தன்னை முன்னிலைப்படுத்தி தன் ஆற்றல்களை வெளிப்படுத்தினார். யா/மத்திய கல்லூரியின் உதைபந்தாட்ட அணியிலில் (1956-1958) பங்கேற்று சிறந்த உதைபந்தாட்ட வீரனாகத் திகழ்ந்தார். உதைபந்தாட்டம் மட்டுமன்றி கரப்பந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளிலும் சிறந்த ஒரு வியைாட்டு வீரனாகத் தன்னை வெளிப்படுத்தினார். அமரர் அவர்களின் இவ் விளையாட்டுக்கு வித்திட்டது எமது மனோகரா விளையாட்டுக் கழகமே ஆகும்.

1961.01.03 இல் தமிழ்பாட ஆசிரியராக யா/வரணி வடக்கு அ.த.க பாடசாலையில் தனது கடமையைப் பொறுப்பேற்றார். பின்னர் அங்கிருந்து இடமாற்றம் பெற்று 1962-1968 வரையான காலப்பகுதியில் நுவரெலியா மாவட்டத்தின் நு/பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார். அக்காலப்பகுதியில் 1962ம் ஆண்டு அல்வாய் புது வீட்டைச்சேர்ந்த மகேசு செல்லம் தம்பதிகளின் ஏக புதல்வியான செல்வமலரை திருமணம் செய்தார். இல்லறத்தின் சிறப்பால் இவர்களுக்கு ஓர் ஆண்மகனையும்(உதயன்) மூன்று பெண்பிள்ளைகளையும்(விஜிதா, மஞ்சுதா, சுகிர்தா) பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்தார். அமரர் அவர்கள் தனது ஆசிரியப்பணிக்கான பயிற்சியினை யா/நல்லூர் பயிற்சிக் கலாசாலையில் பெற்று மீண்டும் கே/உந்துக்கொட அ.த.க பாடசாலையில் இணைந்தார். சில காலம் அங்கு கடமையாற்றிய பின்னர் இடமாற்றம் பெற்று யா/தேவரையாளி இந்துக்கல்லூரி, யா/கம்பர்மலை அ.த.க பாடசாலை, யா/வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலையிலும் கடமையாற்றி 1975ம் ஆண்டு தொடக்கம் 1997ம் ஆண்டுவரை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் தனது அரிய ஆசிரியப்பணியை நிறைவு செய்தார். இப் பாடசாலை சமூகத்தால் இவர் ஆற்றிய பணியைப் போற்றி A.M.C என்று பொறிக்கப்பட்ட தங்கக்கணையாழியை பரிசளித்து கௌரவித்தனர். இதனால் அமரர் அவர்கள் "பொன்னாழி ஆசிரியர்" எனவும் சிறப்பிக்கப்பட்டார்.

அமரர் சிவானந்தன் அவர்களின் சமூகப்பணியை நோக்கும் போது அவர் தனது ஊர் மீது கொண்ட பற்றினை வெளிக்கொணர்வது அவர் ஆற்றிய சமூகப்பணியாகும். இந்த வகையில் அமரர் அவர்கள் எமது கிராம அபிவிருத்தியில் அக்கறை கொண்டு கிராம அபிவிருத்திச்சங்க செயலாளராகவும், 1976ம் ஆண்டு தொடக்கம் 1980ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எமது மனோகரா சனசமூக நிலையத்தின் செயலாளராகவும் செயற்பட்டு எமது சனசமூக நிலைய வளர்ச்சிக்கு பெரும்பணியாற்றினார். மண்சுவரும் தகரக்கூரையுமாக இருந்த எமது சனசமூக நிலையதிற்கு நிரந்தரக்கட்டடம் அமைத்த பெருமை அமரர் அவர்களின் காலத்து நிர்வாகத்தையே சாரும்.




அமரர் சிவானந்தன் அவர்களின் ஆன்மிகப் பணியானது நேரடியாக தோற்றம் பெற்றதன்று. அவரது பூட்டன் பேரன் தந்தை வழிவந்த ஆலயப்பணியே ஆகும். இப்பணியானது இவரது இரத்தத்தில் ஊறிய ஒன்றாகவே காணப்பட்டது. அந்தவகையில் அமரர் அவர்களுடைய தந்தையார் சிறந்த ஒரு மேசனாக அக்காலத்தில் விளங்கியவர் என்பது யாவரும் அறிந்ததே. அவர் தனது வேலையை முடித்துவிட்டு மாலைவேளையில் ஆலயத்திற்கு சென்று விளக்கேற்றுவதும் ஆலயத்தொண்டுகளையும் மேற்கொண்டு வந்தார். அவர் சமய அனுட்டானங்களை முறையாக பேணிய ஒருவராகவும் ஆலயம் சார்ந்த விழாக்களை சமயநெறி நின்று நடாத்தியவராகவும் விளங்கியவர். இவர்களுடைய வழிவந்தவரே அமரர் சிவானந்தனுமாவார். எமது ஆலடிப்பிள்ளையார் மீது அளவுகடந்த பக்தி கொண்டவர். விநாயகப்பெருமானை “பால கணபதி” என்றே அன்பாக அழைப்பார். தனது வாழ்வின் பெரும்பகுதியை ஆலயத்தொண்டிற்காகவே அற்பணித்து வாழ்ந்தவர் அமரர் அவர்கள். இவர் எமதாலயத்திற்கு செய்த தொண்டினை என்றும் நாம் மறந்துவிட முடியாது. அமரரின் தந்தையாரால் எமதாலயத்திற்கு உபகரிக்கப்பட்ட ஆதிமணிக்கு 1996ம் ஆண்டு ஆலய பரிமாணத்துக்கு அமைய கோபுரத்தை அமைத்துக் கொடுத்து அழகுபார்த்தார். அத்தோடு நின்று விடாமல் 2018ம் ஆண்டு எமதாலயத்திற்கான பஞ்சதள இராஜகோபுரத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் அதன் வலது பக்கத்தில் பெரும் நிதிச் செலவில் மணிக்கோபுரத்தையும் அதற்கிசைவான ஆதி மணியையும் அமைத்துக் கொடுத்தார்.

மேலும் அமரர் அவர்கள் எமதாலயத்துக்கு ஆற்றிய சரியைத் தொண்டுகளாக பூக்கூடைகளை பின்னிக் கொடுப்ப வராகவும் ஆலய மகோற்சவகாலத்தில் சாற்றுப்படி அலங்காரங் களை அலங்கரிப்பவராகவும் விளங்கியவர். அதுமட்டுமன்றி 2002ம் ஆண்டு இடம்பெற்ற கும்பாவிஷேகத்திற்கு மகோற்சவ அந்தஸ்தை எம் ஆலயம் பெற்றது. அக்காலத்தில் இருந்து தான் சிவப்பேறு அடையும் காலம் வரையிலும் ஆலயத்தின் கொடிக் கவி, சுற்றுப்பரிகாரப் பதிகங்களை பாடிவந்தார். ஆலய விழாக் களின் போது அந்தந்த விழாக்களுக்கு பொருத்தமான தேவாரங் களைப் பாடுவதில் வல்லவர். இன்றைய இளையதலை முறை யினர் பலர் இவரிடம் வந்து ஆலயவிதிமுறைகளையும் திருமுறை ஓதும் முறைகளையும் அறிந்து சென்றதை நாம் கண்டுள்ளோம்.

அமரர் அவர்களது பரம்பரைப்பூசையான கந்தசஸ்டி பூசையின் ஆறாம்நாளான பாரணைப்பூஜையும் அன்று மாலையிலே முருகன் வள்ளி தெய்வானை திருக்கல்யாண நிகழ்வையும் மிகச்சிறப்பாக நடாத்திவந்தார். அது மட்டுமன்றி அமரர் அவர்கள் மிகவும் வாஞ்சையோடு மேற்கொண்டு வரும் நிகழ்வு திருவாசக முற்றோதலாகும். இந் நிகழ்வினை மார்கழி






மாத திருவெம்பாவைக்காலத்தில் நடாத்திவருகின்றார் இத்திருவாசக முற்றோதலானது 1995ம் ஆண்டு அமரர் அவர் களால் ஆரம்பிக்கபட்டு இற்றைவரை சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. அமரர் அவர்கள் திருவாசகம் மட்டுமன்றி பன்னிருதிருமுறைகளையும் 1997ம் ஆண்டு முற்றோதல் செய்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எம தாலயத்தில் மட்டுமன்றி எமது அயற்கிராம ஆலயங்களிலும் திருவாசக முற்றோதலினை நடாத்துவதற்கு முன்றின்று உழைத்தவராவர். இவைமட்டுமன்றி எமதாலயத்தில் வருடா வருடம் ஓதப்படும் கந்தபுராணம் ஓதுதல், பிள்ளையார் கதைப்படிப்பு, பிள்ளையார் பெருங்கதைப்படிப்பு, அகத்தியர் தேவாரத்திரட்டு மற்றும் நாயன்மார் குருபூசை தினங்களையும் சிறப்பாக நடாத்தினார். இவரது இப்பணியை கௌரவித்து ஆலய பரிபாலனசபை 2014ம் ஆண்டு “மணிவாசகப் புரவலர்” என்ற சிறப்பு பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

அமரர் அவர்களின் ஆலயப்பணி இத்துடன் நின்றுவிடவில்லை. எமது ஆலயத்தின் அறநெறிப்பாடசாலை யின் அதிபராக நீண்டகாலம் செயற்பட்டவர். அதனூடாக ஆலயத்துக்கு நிதி உதவிகளையும் பெற்றுக் கொடுத்ததுடன் பல மாணவர்களின் அறநெறிக்கல்விக்கு வழிவகுத்தவர் என்று கூறினால் அது மிகையாகாது. அமரர் அவர்களது இச் சேவையினை கௌரவித்து 2018ம் ஆண்டு “உலக இந்து தரிசனம்” அமரரை எமதாலயத்தில் வைத்துக் கௌரவித்தது. அமரர் அவர்கள் செய்த சமயப்பணிகள், சமூகப்பணிகளின் மேன்மை காரணமாக “சமாதான நீதவானாக” உயர்வு கண்டார். 2019ம் ஆண்டு மனோகரா சனசமூக நிலையம் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்தது.

“வாழுகின்ற மக்களுக்கு வாழ்தவர்கள் பாடம் என்பார்கள்” அவ்வாறு அமைந்தது தான் எமது தந்தையின் வாழ்க்கையுமாகும். இவர் ஆற்றிய சமூகப்பணியும், சமயப் பணியும் என்றும் நினைவு கூறத்தக்கனவாகும்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”



# எமதூர் முதன்மை நகைச்சுவைக் கலைஞர்களில் ஒருவர் நல்ல மனிதர் ஏரம்பு முருகேசு (1927 - 1989)

█ கனகசபாபதி செல்வநேசன் █

மனிதனுக்கு இருக்கும் உணர்வுகளில் அதிசயமானது நகைச்சுவை உணர்வாகும். பிறரைச் சிரிக்க வைப்பதென்பது எல்லோராலும் இயலாத காரியம். சிலருக்கு அது இயல்பாகவே கிடைத்துவிடும். அப்படியான ஒரு சிறந்த நகைச்சுவையாளர் மற்றும் நடிகர்தான் ஏரம்பு முருகேசு அவர்கள். இவர் எமது கிராமத்தின் கேவோலைக் குறிச்சிக்கு கிழக்கே உள்ள குமாரி யோடைக் குறிச்சியில் வாழ்ந்த ஏரம்பு சிலம்பி தம்பதிகளுக்கு 18.06.1927ல் மூத்த மகனாகப் பிறந்தார். இவருக்கு செல்லையா என்ற சகோதரனும் கண்ணகை, மகேஸ்வரி, நாகமுத்து என மூன்று சகோதரிகளும் உடன் பிறந்தவர்களாவர். இவர்களில் நாகமுத்து தன் வாழ்நாளில் இறுதிவரை தனது சகோதரன் முருகேசு தயவிலேயே வாழ்ந்து வந்தார். முருகேசு அவர்கள் நீண்ட காலமாக மேசன் பொன்னையா(கேவோலை) மேசன் மயிலு (மூன்றாம் பனையடி)ஆகியோருடன் கட்டிடத் தொழில் உதவியாளராக வேலை செய்து வந்தார். வயது மூப்பு காரண மாக அவர்கள் இருவரும் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றதும் தனது தாய்மாமன் மகனான உறவுமுறையில் மைத்துனரான நாகர் கிருஸ்ணபிள்ளை(செட்டியார்) அவர்களின் தவறணையில் ஊழியராகக் கடமையாற்றினார்.

மேலும் இவர் துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை பசுபதி தம்பதிகளின் மகள் பாக்கி யத்தை திருமணம் செய்து நாகேஸ்வரன், இராசரேகா(தங்கம்) மற்றும் புஸ்பரேகா (பாப்பா) ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற் றெடுத்தனர். முருகேசு அவர்களின் சகோதரிகள் கண்ணகை மற்றும் மகேஸ்வரி ஆகியோர் முறையே நாகர் கந்தையா நா.சி.கந்தவனம் ஆகியோரைத் திருமணம் செய்து சேண்டியடிக் குறிச்சியில் ( தற்போதுள்ள மனோகரா ச.ச.நிலையமும் அதனை அண்டிய பகுதிகளும்) வசித்து வந்தார்கள். அவர்கள் தமது சகோதரன் முருகேசு அவர்களை தாமிருக்கும் பகுதியில் குடியமர்த்த விருப்பங் கொண்டவர்களாக திரு திருமதி கந்தையா கண்ணகை தம்பதிகளின் வளவில் ஒரு பகுதியைக் கொடுத்து (தற்போது திருமதி புஸ்பரேகா சாந்தகுமார் வசிக்குமிடம்) குடி யிருக்க வைத்தார்கள். அவரும் சகோதரிகளின் விருப்பத்துக் கிணங்க அங்கே ஒரு குடிசை அமைத்து வாழ்ந்து வரலானார். அப்போது மின்சார வசதிகள் இல்லாத காலம் இவர்களது வீட்டைத்தவிர வேறு வீடுகளெதுவும் அருகில் இருக்கவில்லை. சுற்றிலும் வடலிக் காணிகளாகவே இருந்தன. இரவு நேரங்களில் கும்மிருட்டில் அவ்விடம் பயங்கர அமைதியாக இருக்கும். ஊரவர்கள் அவரிடம் கேட்பார்கள் "இவ்விடத்தில் தனியாக இருக்கப் பயமாக இல்லையா" என்று, அதற்கு அவர் சொல்வார் " எனக்குப் பிள்ளையாரும் முருகனும் துணையிருக்கிறார்கள் பய மில்லை" என்பார். இவரது இறை நம்பிக்கையின் பிரதிபலிப்பாக அவரது மகள் புஸ்பரேகா(பாப்பா)வின் பிள்ளைகளுக்கு ஐங்கரன் மற்றும் கார்த்திகேயன் எனப் பெயர்கள் அமைந்தது சிறப்பான தாகும். ஆனாலும் அவர் மனதில் ஒரு நெருடல் இருந்து கொண்டிருந்தது. தனது சகோதரிகளுக்கு தான் சீதனமாக கொடுக்க வேண்டிய தருணத்தில் அவர்கள் தனக்கு காணி தந்து தங்களுக்கருகில் வாழ வைத்திருக்கிறார்களே இந்தக் காணிக் குரிய பெறுமதியைக் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் அவர் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. அதற்கும் ஒரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது 1976ம் ஆண்டு எமது சமுதாயத்தின் சம்பிரதாய நிகழ்வு மூலம் கிடைத்த பண வருமானத்தைக் கொண்டு தான் குடியிருந்த காணியின் அன்றைய பெறுமதியைச் சகோதரியிடம் கொடுத்து அக் காணியை தனக்குரியதாக்கிக் கொண்டார்.

01

இவரது சகோதரி திருமதி மகேஸ்வரி கந்தவனம் தங்களது வீட்டில் வீரபத்திரருக்கு ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தவேளையில் முருகேசு அவர்களும் தனத குடும்பத்தாருடன் பல தொண்டுகளை மிகுந்த இறை பக்தியுடன் செய்து வந்தார். வருடா வருடம் வீரபத்திரர் ஆலயத்தில் நடைபெறுகின்ற பொங்கல் விழா மற்றும் நவராத்திரி விழாவின் 2ம் பூஜையையும் தனது குடும்பம் சார்பாகச் சிறப்புடன் செய்து வந்தார். (இன்றும் அவரது இளைய மகள் மூலமாக இப் பூஜை நடைபெற்று வருகிறது). நா.சி கந்தவனம் அவர்களுக்கு ஆலயத்தில் பூஜை செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் முருகேசுவும் அவரது மகன் நாகேஸ்வரனும் செவ்வாய் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் விளக்கேற்றிப் பூஜைகள் செய்வார்கள்.

1978க்கு முன்பு எமதூரில் தார்வீதிகள் கிடையாது. புழுதி படிந்த பெருந்தெருக்களும் ஒற்றையடிப் பாதைகளுமே அதிகமாக இருந்தன. பாராளுமன்ற உறுப்பினர் மதிப்புக்குரிய த.இராச லிங்கம் அவர்களின் முயற்சியால் முதன் முதலாக திக்கம் வடிசாலையிலிருந்து எமது மனோகரா ச.ச.நிலைய வளைவு வரை தார்வீதி போடப்பட்டது. அப்போது தார்வீதியை அண்மித்து இருந்தது இவரது வீடு மட்டுமே. ஆதலால் இவரோடு நட்புடன் பழகுபவர்கள் இவரை "றோட்டு வீட்டு முருகேசு" என்றும் அன்புடன் அழைக்கத் தொடங்கினார்கள். இவரது பிள்ளைகளில் நாகேஸ்வரன் சின்னக்கிளி என்பவரையும் இராசரேகா தர்ம குலசிங்கம் என்பவரையும் மற்றும் புஸ்பரேகா(பாப்பா) சாந்த

குமார் என்பவரையும் திருமணம் செய்ததின் பேறாக மதுஷன் நிருஷன் ஜங்கரன் கார்த்திகேயன் எனும் பேரப்பிள்ளைகளும் இவருக்குண்டு.

முருகேசு அவர்கள் நகைச்சுவையாகப் பேசும் ஆற்றல் கொண்ட ஒரு நகைச்சுவை நடிகருமாவார். எமது ஆலய முன்றலில் நடைபெறும் சிவராத்திரி நாடக நிகழ்வுகளில் தனது நகைச்சுவை நடிப்பால் மக்களைச் சிரிக்க வைத்தவர். சுவீப் ரிக்கட் விற்கும் சிங்கள இனத்தவராக அரைகுறை சிங்களம் பேசி ரிக்கட் வாங்க வந்தவர்(கனகசபாபதி) "ரிக்கட் கீயத" என்று கேட்க இவர் "பணிஸ்ஸட்ட தெக்காய்" எனச் சொன்ன லாவகத்தைப் பார்த்து சிரிக்காதவர்களே கிடையாது. நடிகமணி வி.வி.வைர முத்து அவர்கள் தனது நாடகங்களை எமதூரில் மேடையேற்றும் போது சிறிய பாத்திரங்களுக்கான நடிகர்களை அழைத்து வருவ தில்லை. எம்மவர்களை அப்பாத்திரங்களில் நடிக்க வைப்பார். அவரது அரிச்சந்திரா மயான காண்டத்தில் அயலாத்துப் பிள்ளை களாக முருகேசு அவர்களுடன் இராசரத்தினம் (எம்.ஆர்) கனக சபாபதி போன்றவர்கள் நடித்தார்கள். இவர்களுக்காகத் தனியாக வசனமெதுவும் கிடையாது அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் என்ன பேசுகிறார்களோ அதுதான் வசனம். காட்டுக்குள் லோகிதாசன் பாம்பு தீண்டி மரணித்து விடுவான். மகனின் பிரிவு தாங்காது சந்திரமதி கதறி அழுதுகொண்டிருக்க அயலாத்துப் பிள்ளைகளி லொருவராக நடித்த முருகேசு சக தோழர்களிடம் "பக்கத்தில தான் விசகடி வைத்தியர் வேலுப்பிள்ளை வீடு இருக்குது லோகி தாசனை அங்கை கொண்டு போனால் காப்பாத்தலாம்" எனக் கூறியவாறே லோகிதாசனைத் தூக்கிச் செல்லும் அவரது உடல் மொழியைப் பார்த்து பார்வையாளர் பகுதி சிரிப்பில் அதிரும். அத்துடன் விட மாட்டார் மீண்டும் " பக்கத்திலை தான் எங்கடை பங்குவேம்படிச் சுடலை கிடக்கு செலவில்லாமல் நாங்களே அடக்கம் செய்வோம்" என்பார். சிரித்துச் சிரித்து பார்வையாளர் களுக்கு வயிற்று வலியே வந்துவிடும். சந்திரமதி யாக நடித்தவரே தன்னை மறந்து மேடையிலேயே சிரித்து விட்டார் .

02

நவீன வழிப்பு எனும் நாடகம். சவரம் செய்வதற்காக சலூனுக்கு வருவார் முருகேசு. சவரத் தொழிலாளியாக அழகானந்தன். சவரத் தொழில் ஆயுதங்களாக சீப்புக்குப் பதிலாக குப்பை விறாண்டி சவர்க்காரம் பூசும் பிறஸ்சுக்குப் பதிலாக தும்புத்தடி சவரக்கத்தியாக நம்மவர்கள் ஓலை வெட்டப் பயன் படுத்தும் பெரிய கத்தி(இடமட்டக் கத்தி என்றும் சொல்வார்கள்). முருகேசு அவர்களைக் கதிரையில் இருக்க வைத்து குப்பை விறாண்டியால் தாடியை வாரி வாய்க்குள் தண்ணீர்விட்டு அவரின் முகத்தில் தண்ணீரைப் பீச்சியடித்து சவர்க்காரம் பூசி தும்புத் தடியால் தேய்த்து கத்தியால் வழித்தெடுக்கும் வரை அவர் முகத்தில் காட்டிய நகைச்சுவை கலந்த உணர்வுகளை அன்று பார்த்தவர்கள் இன்றும் மறந்திருக்க மாட்டார்கள். இவருக் கிருக்கும் நகைச்சுவை உணர்வு அவரது மகன் நாகேஸ்வரன் மற்றும் பேரன் கார்த்திகேயன் ஆகியோரிடமும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டிகைக் காலங்களில் ஆண்கள் பெண்வேடமிட்டு உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தும் நடைமுறை இன்று வரை நம்மவரிடையே தொடர்ந்துவரும் நிகழ்வாகவுள்ளது. 70களின் நடுப்பகுதியில் இவ்வாறான ஒரு போட்டி நடைபெற்ற போது அப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராக சிங்கள அமைச்சர் ஒருவரை அழைத்திருந்தார்கள். கோட் சூட் அணிந்து அமைச்சராக வந்தவர் வேறு யாருமல்ல நமது நாயகன் முருகேசு அவர்களேயாவார். சிறப்பு விருந்தினருக்கு வீரர்கள் அறிமுகஞ் செய்யப்பட்டு போட்டி ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர் ஆங்கிலத்தில் உரையாற்ற( தமிழை ஆங்கிலம் மற்றும் சிங்களம் பேசுவது போல வேறுபாடின்றிப் பேசுவார்) அதனை ஒருவர் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அப்போது கூட்டத்திலிருந்து ஒருவர் "நீங்கள் கொழும்பிலிருந்து எப்படி வந்தீர்கள்" எனக் கேட்டார். அந்நேரம் வான் பரப்பில் விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்ததைக் கவனித்தவர் "இதோ நான் வந்த விமானம் என்னைப் பலாலியில் இறக்கிவிட்டு திரும்பிச் செல்கிறது. பலாலியிலிருந்து இங்கு என்னை ஏற்றிவந்த வாகனங்கள் அதோ அங்கே நிற்கின்றன எனச் சொல்லி கோயில் பக்கம் கையைக் நீட்டினார். அங்கே விநாயகர் வீதிவலம் வருகின்ற மூஞ்சூறு வாகனமும் குதிரை வாகனமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. பின்னர் பரிசில்கள் வழங்கும் போது பரிசு வாங்க பெண் வேடத்தில் வந்தவரிடம் " பந்தை உதைத்தது போல கணவனையும் உதைக்க வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். விழா முடிந்ததும் அக்கால இளைஞர்கள் அவரைத் தோளில் சுமந்தவாறே அவரது வீடுவரை அழைத்துச் சென்றார்கள். இந் நிகழ்வானது நீண்டகாலம் நம்மவரிடையே பேசுபொருளாக இருந்தது. இந் நிகழ்வைப் பார்க்கத் தவறியவர்களுக்கு நீண்டகால அங்கலாய்ப் பாகவே தொடர்ந்தது.


முருகேசு அவர்கள் ஊரிலுள்ள இளைஞர் ஒருவரைப் பார்க்கும்போதெல்லாம் குறை மாதத்தில் பிறந்தவனே என்பார். ஒருநாள் அவரிடம் "ஏன் என்னைக் குறை மாதத்தில் பிறந்தவன் என்கிறீர்கள்" என அவ் இளைஞன் கேட்டார். அதற்கு அவர் அவனிடம் " நீ என்ன மாதத்தில் பிறந்தாய்" எனக் கேட்க இளைஞர் "மாசி மாதம்" என்றார். "மாசி மாதம் 28 நாட்கள் தானே அப்படியானால் அது குறை மாதம் தானே ஆகவே நீ குறை மாதத்தில் பிறந்தவன் தானே" எனச் சொல்ல இளைஞன் அவரது சமயோசிதப் பேச்சில் வியந்து சிரித்தவாறே சென்றுவிட்டார்.

இவ்வாறு தனது நகைச்சுவைப் பேச்சால் அனை வரையும் சிரிக்க வைத்து தான் வாழ்ந்த காலத்தில் எவருக்கும் தீங்கு செய்யாது நல்ல மனிதராக வாழ்ந்து 1989ம் ஆண்டு இவ்வுலகை விட்டு நீங்கி நகைச்சுவை உணர்வாக எம்மவர் மனங்களில் நிறைந்துகொண்டார்.

(தகவல்கள் தந்தவர்கள்:- திருமதி: புஸ்பரேகா சாந்தகுமார் திரு: செல்லையா யுவராசா, திரு: சிவகுரு கணேசலிங்கம்.)



திரு திருமதி வெற்றிவேல் ரதி தம்பதியினரின் புத்திரன் துஷ்யந்தன் அவர்களும், வதிரியைச் சேர்ந்த திரு திருமதி ரவிவர்மா ரமணி தம்பதியினரின் புத்திரி தாட்ஷாயினி அவர்களும் 25.10.2021 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள்.



# கிளானையின் அருமைராசா

## ஆயுர்வேத வைத்தியர் கதிகாமு வல்லிபுரம் அவர்கள்

■ செல்வராசா அட்ஜெயலிங்கம் - ஆசிரியர்

எமது அல்வாய்க் கிராமம் பல்வேறு துறைகளில் பல்வேறு சிறப்புக்களைக் கண்டு வருகிறது. எமது கிராமத்தை செதுக்கிய, செதுக்கிக் கொண்டிருக்கின்ற, செதுக்கப் போகின்ற சிற்பிகளின் வரலாற்றுப் பதிவுகளை வெளியுலகிற்குக் கொண்டுவர பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் "நாங்கள்" பத்திரிகையை பெருமனதோடு வரவேற்றுக் கொண்டு எத்தனை இடர் வரினும் உறுதியோடு பயணித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மற்றும் துணைஆசிரியர்கள் ஆகியோரிற்கு வாழ்த்துக்களைக் கூறிக் கொண்டு கிளானையின் அருமைராசா என எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் ஆயுர்வேத வைத்தியர் கதிகாமு வல்லிபுரம் அவர்களின் வரலாற்றுப் பதிவுகளை அல்வாய்க் கிராமத்தின் ஆவணப் படுத்தலுக்காகப் பதிவிடுகின்றேன்.

கிளானை, தனக்கென ஒரு பாதையைக் கொண்ட பல்வேறு துறைகளில் பல ஆளுமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் எமது கிராமத்தின் நற்பெயரைப் பாதுகாப்பதில் பங்கெடுக்கும் குறிச்சிகளில் இதுவும் ஒன்று. இக் குறிச்சியில் கதிர்காமு அன்னப்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டு பெண் பிள்ளைகளுடன் ஒரேயொரு ஆண்மகனாக 17.03.1936 இல் அருமை ராசாவாக வல்லிபுரம் பிறந்தார். இவர் உடன் பிறந்தோர்கள் சடையர் செல்லம்மா, செல்லத்துரை இரத்தினம். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/வதிரி வடக்கு மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யா/திரு இருதயக் கல்லூரியிலும் உயர் கல்வியை யா/நெல்லியடி மத்தியா மகா வித்தியாலயத்திலும் கற்றுக் கொண்டார். உயிர் காக்கும் மருத்துவத் துறையை தேர்வு செய்து யாழ்ப்பாணம் லங்கா ஆயர்வேத மருத்துவக் கல்லூரியில் 1957இல் இணைந்து 1961 இல் பரீட்சைத் தேர்வில் முதல் பிரிவில் சித்தியடைந்தார். தான் கல்வி கற்கும் காலத்தில் அரியாலையில் கவிஞர் க.வே.ஐயாத்துரை அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்து தன்னுடைய மருத்துவக் கல்வியினைக் கற்றுக் கொண்டார். அதனால் தான் இன்றுவரை கவிஞர் குடும்பத்திற்கும் இவர்களிற்கும் இடையே மிக நெருக்கமான உறவொன்று பேணப்பட்டு வருகின்றது. இதன் பேறாக கவிஞருடைய இளையமகன் குமரதாசன் எமது சகோதரி விஜயாவை திருமணம் புரிந்துள்ளார் எனவும் எண்ணத் தோன்றுகிறது.

படிப்பு நிறைவேறியதும் உடுப்பிட்டி நவிண்டில் வரணி போன்ற கிராமங்களில் தன்னுடைய வைத்தியப் பணியை மக்களிற்கு ஆற்றி வந்தார். வீடு தேடி வரும் உறவுகளுக்கும் வீட்டில் வைத்தும் வைத்திய சேவையை வழங்கி வந்தார். அந்தக் காலத்தில் எமது ஊரின் ஒரு பதிவாகச் சொல்லலாம் BSA மோட்டார் சைக்கிள் பயன்படுத்தி தனது தொழில் துறையை இலகுவாக்கிக் கொண்டவர். இவரை அடையாளப் படுத்தும் போது இவருடைய BSA மோட்டார் சைக்கிளும் சேர்ந்து அறிமுகமாகும்.

1966ஆம் ஆண்டு பொலிகண்டி தெணியைச் சேர்ந்த மாணிக்கம் லட்சுமி தம்பதிகளின் மூத்த மகளாகிய சிதம்பரேஸ்வரியை திருமணம் முடித்தார். இவர் சித்த ஆயுர்வேத வைத்தியராக 13.08.1969இல் அரச நியமனம் பெற்று எமது கிராமத்தின் முதல் அரச நியமனம் பெற்ற ஆயுர்வேத வைத்தியரானார். நியமனத்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாநகரசபை ஆயுர்வேத வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமைப் பொறுப்பை ஏற்றார். இல்லற வாழ்வின் பேறாக மூத்த மகனான யோகேஸ்வரனைக் (சுவிஸ்லாந்து) கண்டு இன்புற்றனர். இவரைத் தொடர்ந்து செல்வேஸ்வரன் (இங்கிலாந்து), தர்ஷனி (கனடா), சதீஸ்வரன் (நியூஸிலாந்து), ஞானேஸ்வரன் (கனடா), ஞானகரன் என பிள்ளைச் செல்வங்களைப் பெற்று சிறப்போடு வாழ்ந்து வந்தார்.

இவர் தன்னுடைய வைத்தியப் பணியை யாழ்ப்பாண மாநகரசபை வைத்தியசாலையில் 10 ஆண்டுகள் கடமையாற்றி தொடர்ந்து சுன்னாகம் பிரதேசசபை







வைத்தியசாலை ஆகிய ஏழாலை பணிமனையிலும் கடமை யாற்றி 01.01.1980 இல் இருந்து 31.03.1987 வரை வடமராட்சி கரவெட்டி பிரதேசசபையின் கட்டைவேலி உபபிரதேசப் பணிமனையில் (அல்வாய்) தன்னுடைய சேவையை வழங்கி வந்தார். இக்காலப் பகுதியில் இடம் பெற்ற ஒப்ரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கையின் போது காயப்பட்ட பலருக்கு தமது வீட்டில் வைத்து வைத்தியம் செய்து பல உயிர்களைக் காப்பாற்றினார் என்பதும் குறிப்பிடத் தக்க ஒரு செய்தி ஆகும். இதனைத் தொடர்ந்து உடுப்பிட்டி பிரதேச சபையின் நவிண்டில் பணிமனையில் தனது பணியைத் தொடர்ந்தார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரண மாக திருகோணமலை நகருக்கு குடும்பத்தினருடன் இடம் பெயர்ந்து தனது பணியை உப்புவெளி வைத்தியசாலையிலும் தொடர்ந்து சாம்பல் தீவு வைத்தியசாலையிலும் பணியாற்றி 12.12.1991இல் அரசதுறை யில் இருந்து ஓய்வு பெற்றார். ஓய்வின் பின் மீள் நியமனம் பெற்று சாம்பல் தீவு வைத்தியசாலையில் தனது பணியைத் தொடர்ந்தார்.

தனது வைத்தியப் பணிக்கு மேலாக ஆலடி பால கணபதியின் மீதும் தந்தைவழி சக்கோட்டைப் பிள்ளையார் மீதும் அளவுகடந்த பக்தி கொண்டு திருவிழாக்களையும் ஏனைய தொண்டுகளையும் செய்து வந்தார். எமது பாலகணபதி அமர்ந்திருக்கும் ஆசனக்கல்லையும் திருவாசியினையும் பாலகணபதிக்கு இடம் பெற்ற முதல் கும்பாபிஷேகத்தின் போது வழங்கியிருந்தார். சக்கோட்டைப் பிள்ளை யாரில் ஆவணிச் சதுர்த்தி பிள்ளையார் கதை என்பவற்றைத் தனி உபயமாக செய்ததோடு அங்கு திருவிழா உபயகாரராக வும் இருந்தார். ஆலடியானில் 08ஆம் திரு விழாவில் எமது தந்தை செல்வராசா அவர்களுடன் தானும் அங்கத்தவராக இருந்து இறைபணி களை ஆற்றி வந்தார். பின்னர் 1978ஆம் ஆண்டு எமது தந்தை யார் செல்வராசா தலைவராக இருந்த காலத்தில் புதிய திருவிழா பகிர்வுகள் திரு வுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாம் திருவிழாவினை கிளானைக் குடும்பம் சார்பாக Dr.தங்கவேல் அவர்கள் பொறுப்பேற்று குடும்பத்தின் மூத்த உறுப் பினர் ஆகிய இவரிடம் திருவிழாப் பொறுப் பினைக் கொடுத்து அதனைச் செய்து வந் தனர். இடைக்காலத்தில் ஏற்பட்ட சிறுமனக் கசப்புக்களால் தனது மருமக்களிடம் திரு விழாப் பொறுப்பினை ஒப்படைத்து விட்டு சற்று விலகி தனி அங்கத்துவ உரிமை யுடன் செயற்பட்டு வந்தார். ஆலடியான் மீது கொண்ட பெரு நம்பிக்கையால் எப்படியும் ஒரு திருவிழாவில் இணைய வேண்டும் என்ற உயர் சிந்தனையால் அப்போது பொதுத் திருவிழாவாக இருந்து வந்த தீர்த்தத் திருவிழா வினை தன்னைப் போன்று தனி அங்கத்துவமாக இருந்து வந்த உறுப்பினர்களை யும் இணைத்து அவர்கள் எல்லோருடைய பெரு முயற்சியால் தீர்த்தத் திருவிழா வினை தமது திருவிழாவாக பெற்றுக் கொண்டார். இத் திருவிழாவின் விழாத் தலைவராக 10ஆம் திருவிழா அங்கத்தவர்களால் நியமிக்கப்பட்டு அன்று தொடக்கம் உயிர் நீங்கும் வரை திருவிழாவின் தலைவராக இருந்து தன் கடமைகளை நிறைவேற்றி வந்தார்.



இப்புகைப்படம் வல்லிபுரம் அவர்களுடைய பேர்த்தியாரான வள்ளிப்பிள்ளையினுடையது. இவர் 1800 காலத்தில் பிற்பகுதியில் பிறந்தவர்.

அத்தோடு மட்டுமல்லாமல் தான் தற்காலிகமாக வாழ்ந்து வந்த திருகோணமலைப் பிரதேசத்தில் கோணேஸ்வரப் பெருமான் மீது அதிக பக்தி கொண்டு அங்கு இடம் பெறும் பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு தனது ஆன்மீக சேவைகளை யும் செய்து வந்தார். ஆலயங்களில் திருவாசக முற்றோதல், புராண படலங்கள் படித்தல், திருமுறைகள் ஓதுதல் போன்ற வற்றில் மிக ஈடுபாடு கொண்டிருந்தார். ஊரில் வாழும் காலங் களில் வெள்ளிக்கிழமை தோறும் சந்நிதியான் சந்நிதிக்குச் சென்று முருகப் பெருமானைத் தரிசிப்பதிலும் தவறுவதில்லை. அத்தோடு தனது புகுந்த இடமான தெணியில் அமைந்துள்ள வைரவப் பெருமான் ஆலயத்திற்கும் தன்னுடைய கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி வந்தார். தனது இறுதிக் காலங்களை ஆலய வழி பாட்டிற்கென்றே ஒதுக்கி தன் பிள்ளைகள் மூலம் ஆலயங் களுக்கு தம்மால் முடிந்த பல சேவைகளைச் செய்து வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து 2017ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ஆம் திகதி இறைவ னுடைய பாதக் கமலங்களை சரணடைந்தார்.

இப்பதிவுகள் எமக்கு உணர்த்தும் முக்கியமான செய்தி ஒன்று உள்ளது. தற்போது சாதியை ஓர் ஆயுதமாக எடுத்து எமது கிராமத்து மக்களை சாதி ஒழிப்பு போராட்டங்களில் ஒழித்துக் கொண்டவர் களென வெளிப்படையாக மேடைகளிலும் பொது வெளிகளிலும் பேசுவதோடு புத்தகங் களிலும் எழுதுகின்றார்கள். கத்தியின்றி இரத்தமின்றி சத்தமின்றி ஒரு பாரிய சமூகப் புரட்சியை ஏற்படுத்தும் கிராமமாக அவர் களால் பார்க்க முடியவில்லை. சாதீயம் பேசுவோர்க்கு நெல்சன் மண்டேலாவின் சிந்தனையில் ஒரு சிறு மாற்றத்தைச் செய்யலாம் என நினைக்கின்றேன்.

"Education is the most powerful weapon which you can use to change the caste"

இதுவே எமது கிராம மக்களின் பதிலாக அமைய வேண்டும் .

# சமூக முன்னோடியும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய அமரர் கதிர்காமு தானியேல் மாணிக்கம் (கே.டி.எம்)

■ க.மகேந்திரராசா

அல்வாய் கிராமத்தின் கவிஞர் செல்லையா வீதியின் நுழைவாயிலில் தனத்தியவத்தை மற்றும் மடத்துக் கடவை குறிச்சிகள் காணப்படுகின்றன. இதில் மடத்துக்கடவையை குறிப்பிடுகின்ற போது இரண்டு பக்கங்களும் மண் திண்ணை களைக் கொண்ட தலைவாசலுடன் கூடிய ஒருபெரிய மண்வீடும் மாலும் ஒருங்கே அமைந்ததோடு முற்றத்தில் மாமரங்கள் பெரியதாக வளர்ந்து எப்பொழுதும் நிழல் தந்துகொண்டு சோலையாகவும் செழிப் பாகவுமுள்ள வீட்டில் அமரர்கள் ஜோ.சண்முகம் உபாத்தியார் மற்றும் க.தா.மாணிக்கம் அதிபர் ஆகிய சமூக முன்னோடிகள் வாழ்ந்து வந்தார்கள்.

கதிர்காமு தானியேல்



மாணிக்கம் அவர்கள் அல்வாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த கதிர்காமு அவர்களுக்கும் முல்லைத்தீவு வலயன் மடத்தைச் சேர்ந்த நாகம்மா அவர் களுக்கும் புதல்வனாக 22.09.1907ம் வருடம் முல்லைத்தீவில் பிறந்தார். இவரது சகோதரி பெயர் வள்ளிப்பிள்ளை. சிறு வயதில் பெற்றோரை இழந்த நிலையில் இவரது மைத்துனராகிய ஜோ.சண்முகம் உபாத்தியாயருடைய கண்காணிப்பில் அல்வாய் மடத்துக்கடவையில் வளர்ந்தார். அன்றைய காலத்தில் சில இந்துக் குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டார்கள். அமரர் சண் முகம் அவர்களும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி வதிரி வடக்கு மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் கல்வி கற்று ஆசிரியராகப் பணி புரிந்தார். அதே போல் மாணிக்கம் அவர்களும் கிறிஸ்தவ மதத்தினைத் தழுவி வ.வ.மெ.மிஷன் பாடசாலையில் கல்வி கற்று அதே பாடசாலையில் 1938ம் ஆண்டு ஆசிரியராக சேவையில் உள்வாங்கப் பட்டார். இவர் ஆசிரியராக இருந்ததோடு மட்டுமல்லாமல் சமூகசேவைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியதோடு மற்றவர்களை மதித்து நடத்தும் சிறந்த நற்பண்பினையும் கொண்டிருந்தார். தன்னைவிட வயதில் குறைந்தவர்களையும் அன்போடு அரவணைத்து மரியாதையுடன் கதைத்து மகிழ்வார். 1949ம் ஆண்டு தலைமை ஆசிரியராக பதவியுயர்வு பெற்று அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை அதே பாடசாலையில் தலைமை யாசிரியராக கடமையாற்றினார். அன்றைய காலத்தில் வாகன வசதிகள் அரிதாக இருந்த காரணத்தால் தூர இடங்களிலிருந்து பாடசாலைக்கு வந்து போவதில் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். இதனைக் கருத்திற் கொண்டு பிள்ளைகளை பாடசாலைக்கு ஏற்றி இறக்குவதற்காக மாட்டு வண்டில்களை ஒழுங்கு செய்ததோடு பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக அயராது உழைத்ததோடு தரம் ஐந்து வரை இருந்த பாடசாலையை தரம் எட்டுவரை உயர்த்திய பெருமையும் இவரையே சாரும்.

திருமண வயதினை அடைந்தபோது மைத்துனர் சண்முகம் ஆசிரியரது சகோதரியான பாக்கியம் என்பவரை திருமணம் செய்து நேசமலர், சுகிர்தமலர் (கிளியக்கா) ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாக பெற்றெடுத்தனர். தமது பிள்ளைகள் மீது அன்பு செலுத்தி கல்வியறிவூட்டி வளர்த்ததைப் போலவே மைத்துனர் சண்முகம் ஆசிரியருடைய பிள்ளைகளான ஜே.எஸ்.கிறிஸ்ததாஸ் (ஆசிரியர்), ஜே.எஸ்.சத்தியநாதன் (கணக்காளர், பனைவள அபிவிருத்திசபை) மற்றும் தனது சகோதரியின் மகனாகிய வே.த.ஜயாத்துரை (பருத்தித்துறை தெ.ப.பொ.உ.வி.கூ.ச) ஆகியோரை மருமக்களாக எண்ணாது தனது பிள்ளைகளைப் போல் நேசித்து அவர்களை வாழ்வில் உயர்வடையச் செய்த உத்தமரா வார். பிள்ளைகள் இருவரும் கல்வி கற்று சிறந்து விளங்கியதோடு உரிய வயது வர மூத்த மகள் நேசமலரை இவரது மருகனாகிய ஜே.எஸ்.கிறிஸ்ததாஸ் (ஆசிரியர்) அவர்களுக்கு திருமணம் செய்து நேசராஜன் என்ற பேரப்பிள்ளையையும் இளைய மகள் சுகிர்தமலரை யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த நா.அருமைலிங்கம் (புகையிரத நிலைய அதிபர்) அவர்களுக்கு திருணம் செய்து வைத்து சுரேஸ்குமார்(பாபு), சுலோஜினி, சுஜீவா, சதீஸ்குமார் (கண்ணன்) சுஜீபா ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு இன்புற்றிருந்தார்.


அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கான பல செயற்பாடு களில் அமரர் அவர்கள் கவிஞர் மு.செல்லையா அவர்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டவர். எமது சனசமூக நிலையத் திறப்பு விழாவிற்கு முக்கிய பேச்சாளராக ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பரீட்சகருள் ஒருவராகிய பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் அழைக்கப்பட்டபோது அமரர் கே.டி.எம் அவர்களினது பங்கும் கணிசமாக இருந்தது. தனது வழியில் மருமகன் ஜே.எஸ்.சத்தியநாதன் மற்றும் பேரப்பிள்ளை சுரேஸ்குமார் (பாபு) ஆகியோரை மனோகரா நிலையத்தின் அங்கத்தவர்களாக்கி மகிழ்ந்தார். அமரர் சத்தியநாதன் அவர்கள் எமது நிலையத்தின் கலை, கலாசார, விளை யாட்டு துறைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருந்ததுடன் நிலைய விளையாட்டு நிகழ்வுகள் பலவற்றுக்கு மத்தியஸ்தராக கடமையாற்றியிருந்தார். எமது நிலையத்தின் செயற்பாடுகளில் இவரது பங்கும் பணியும் கனதியானது என்பதை குறிப்பிட முடியும். அமரர் சுரேஸ்குமார் (பாபு) அவர்கள் எமது நிலையத்தின் தீவிர அபிமானியாக மட்டு மல்லாமல் நிலைய நிர்வாக நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

கதிர்காமு தானியேல் மாணிக்கம் அவர்கள் தனது வீட்டுக் காணியில் “மால்” என்றழைக்கப்படும் பெரிய கொட்டில் ஒன்றை அமைத்து இப்பிரதேச மாணவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து எந்தவித உபகாரங்களையும் பெறாமல் மாலைவேளைகளில் வகுப்புகளை இலவசமாக நடாத்தி மாணவர்களை கல்வியில் சிறந்து விளங்க வழிகாட்டியாக இருந்தார். கல்விச் சேவையில் மட்டுமல்லாது சமூகசேவை களிலும் ஈடுபட்டு பல குடும்பங்களின் இன்னல்களைப் போக்கி உயர்ந்த நிலையை அடையச் செய்துள்ளார். சிறுபான்மைத் தமிழர்களின் விடிவுக்காக உருவாக்கப்பட்ட அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உபதலைவராக அதன் ஆரம்ப காலம் தொட்டு அரிய சேவைகளைச் செய்ததன் மூலம் கல்வி அறிவாலும் பொருளாதார விருத்தியாலும் பின் தங்கியிருந்த சிறுபான்மைத் தமிழர் சமூகங்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டார். இவர் மகாசபையில் கல்விச் சபைக்கு தலைவராக இருந்த காலத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் வாழும் பகுதிகளில் பத்துக்கு மேற்பட்ட பாடசாலை களும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் உருவாக்கப்பட வாய்ப்புகள் கிடைத்தன. இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது இரவு பகல் பாராமல் தனது பணியைச் செய்து வெற்றி கண்டவர்.

அமரர் மாணிக்கம் அவர்கள் கிறிஸ்தவமாக இருந்து கொண்டு திருத்துவப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். ஆரம்ப காலத்தில் வதிரி அல்வாயைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் கட்டைவேலி திருச்சபைக்கு சென்றே வழிபாடுகளைச் செய்து வந்தனர். பின்பு நெல்லியடி மெதடிஸ்த திருச்சபை அமைக்கப்பட்ட போது கட்டைவேலியில் இருக்கும் குருவானவர் மாதத்தில் ஒரு தடவை நற்கருணை வழி பாட்டினை நடத்துவார். ஏனைய ஞாயிறு வழிபாடுகளை க.தா.மாணிக்கம் அவர்களும் ஏனையவர்களும் நடாத்தியிருந் தார்கள். மேற்படி நிகழ்வுகள் அவரது வாழ்விலும் திருப்பணி யிலும் அதிக செல்வாக்கை செலுத்தியுள்ளது எனலாம்.

அன்றைய காலத்தில் எமதூரில் குடிநீர் பிரச்சினை இருந்தது. ஒரு சில வெட்டுக்ககிணறுகள் மாத்திரமே இருந்தன. அவை அனைத்து மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலகுவாக இருக்கவில்லை. இதன் தேவையைக் கருத்திற் கொண்டு அமரர் அவர்கள் கிணறு வெட்டுவதற்காக நகர சபையுடன் தொடர்பு கொண்ட போது இடம் இருக்குமாயின் கிணறு வெட்ட உதவி செய்வதாக கூறியிருந்தனர். தனது காணி யில் ஒரு பகுதியைஒதுக்கிக் கொடுத்திருந்தபோதும் நகர சபை கொடுப்பதாக கூறியிருந்த பணத்தினை வழங்காத நிலையில் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் பொருட்டு தனது சொந்தச் செலவில் கிணற்றினை வெட்டிக் கட்டி முடித்து மக்களின் தேவையைப் பூர்த்தி செய்திருந்தார். இது ஒரு நன்னீர் கிண றாகும். இதனை எல்லோரும் மடத்துக் கடவைக் கிணறு என்றே அழைப்பார்கள். இக்கிணறு இன்றும் பாவனையிலுள்ளது.

இவரரது வீட்டில் பெரிய வானொலிப் பெட்டி ஒன்று இருந்தது. மாலை வேளைகளில் தங்களது தொழில்களை முடித்துக் கொண்டு அயலவர்கள் செய்திகள் கேட்பதற்காக ஒன்று கூடுவார்கள். அத்தோடு தினசரிப் பத்திரிகையும் வைத்திருப்பார். வந்திருப்பவர்களுக்கு அதனையும் வாசித்துக் காட்டி நாட்டு நிலவரங்களைப்பற்றி விளங்கப்படுத்துவார். தேர்தல் காலம் என்றால் தேர்தல் முடிவுகளை அறிவதற்காக எமது கிராமத்தி



லுள்ளவர்கள் மாத்திரமல்ல அயற்கிராமங்களில் உள்ளவர்களும் இவருடைய வீட்டில் ஒன்று கூடுவார்கள். வந்திருப்பவர்கள் எல்லோரையும் இன் முகத்துடன் வரவேற்று உபசரணைகள் செய்து மகிழ்வடைவார். ஒவ்வொரு வருடமும் நத்தார் பண்டிகை மற்றும் புது வருடப் பிறப்பு என்றால் இவரது வீடு விழாக்கோலம் பூண்டிருக்கும். எமதூர் மக்களும் அயற்கிராம மக்களும் இவரது குடும்ப நண்பர்களும் மாணவர்களும் என பலர் இவருடைய வீட்டுக்கு வருகை தந்து வாழ்த்துக்களையும் தெரிவிப்பார்கள். இவரது குடும்பத்தினர் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அனுப்புவார்கள்.

ஆசிரியப் பணியில் மட்டுமன்றி சமய வளர்ச்சிக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காகவும், சமூக மறுமலர்ச்சிக் காகவும் சமூக முற்போக்குக்காகவும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய சமூகப் போராளியும், சமூக முன்னோடியுமாகிய கதிர் காமு தானியேல் மாணிக்கம் (கே.டி.எம்) அவர்கள் 07.03.1977ல் இவ்வுலக வாழ்வை விட்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் மறைந்து நாற்பத்து நான்கு வருடங்கள் சென்றிருந்தாலும் இவர் ஆற்றிய பணிகள் இன்றும் எம் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கின்றது.

உசாத்துணை:-

1. அமரர் கதிர்காமு தானியேல் மாணிக்கம் அவர்களின் நினைவுமலர்

2. அமரர் கதிர்காமு தானியேல் மாணிக்கம் அவர்களின் “வாழ்வினதும் பணியினதும் ஒளியிலிருந்து” சுலோஜினி அருமைலிங்கம்

3. கவிஞர் மு.செல்லையா நினைவுமலர்.

# நிஜத்திலும் நாடகத்திலும் ஏற்ற பாத்திரத்தை திறம்பட சிறப்பித்த ஆளுமை செல்லையா யோகதாஸ்

■ க.பரணீதரன் ■



ஏகாதி பத்தியவாய் சுதமா..
எமராஜ பூபதி நானே...

அரங்கில் யமதர்மராஜா தோன்றுகின்றார். யமதர்மராஜா வின் தோற்றத்தைக் கண்டு அரங்கின் முன்னிருந்த சிறுவர்கள் அலறியடித் துக் கொண்டு தாய்மாரை கட்டி அணைக்கின்றார்கள். சபையில் அமைதி அனைவரினது கண்களின் பார்வையும் அரங்கை நோக்கி குவி கின்றது. பாத்திரத்திற்கு உரிய உருவமும், அங்க அசைவுகளும், கம்பீரமும், சிரிப்புமாக யமதர்ம ராஜா அரங்கில் நடித்துக் கொண்டி ருந்தார். சபையில் இருந்த அனை வரும் உற்சாகத்தோடு அரங்கை பார்த்துக் கொண்டிருக்க கலாநிதி தம்பிஐயா கலாமணி அவர்களின் அண்ணாவியத்தில் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் யமலோகக் காட்சி மேடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உச்சஸ் தாயில் பாடல், அதிர்வுள்ள குரல் என யமதர்மராஜா மேடையைக் கலக்கிக் கொண்டிருந்தார். அந்த காட்சி முடிந்ததும் பலத்த கர கோஷம். அந்த யமனை எமதூரவர்கள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்த யமன் வேறு யாருமல்ல எமதூரின் கலைப்பாரம்பரியத்தில் தோன்றிய செல்லையா யோகதாஸ் அவர்களே.

*27.12.1954* ஆம் ஆண்டு செல்லையா பார்வதி தம்பதி யினருக்கு நான்காவது பிள்ளையாக யோகதாஸ் அவர்கள் பிறந்தார். தொழில் நிமித்தம் செல்லையா அவர்கள் அரியாலையில் வசித்து வந்த காலத்தில் இவர் அரியாலை யில் பிறந்தார். இவருக்கு சகோதரங் களாக சந்திரமோகனா, விமலதாஸ், செல்வராணி ஆகியோர் கிடைத்தார்கள். குடும்பத்தில் இளையவராகப் பிறந்ததனால் எல்லோருக்கும் செல்லப்பிள்ளையாக இவர் விளங்கினார். அரியாலையில் வசித்த காரணத்தால் அரியாலை ஆனந்தா வித்தியாசாலையில் தனது ஆரம்ப கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர் மீள தனது கிராமமான அல்வாய்க்கு தந்தையாருடன் மீள வந்து குடியேறி தேவரையாளி இந்துக்கல்லூரியில் தரம் 4 தொடக்கம் தரம் 8 வரை கற்றார். தேவரையாளி இந்துவில் கற்ற காலத்தில் ஆர்.எஸ்.செல்லத்துரை, அமிர்தலிங்கம், ஆழ்வாப்பிள்ளை போன்ற ஆசிரியர்களின் விருப்பத்திற்குரிய மாணவனாக திகழ்ந்ததோடு அவர்களது கற்பித்தலில் விருப்பும் கொண்டிருந்தார். இவரது மூத்த சகோதரி சந்திர மோகானா அவர்கள் திருமணத்தின் மூலம் தம்பிமுத்து ஆசிரியர் அவர் களைக் கரம்பிடித்துக் கொண்டார். தனது சகோதரியில் அளவிலாப்பாசம் கொண்ட இவர் தொழில் நிமித்தம் தம்பிமுத்து ஆசிரியர் அவர்கள் அம்பலாங்கொடைக்கு சென்ற போது அவர்களுடன் சென்று அங்குள்ள அம்பலாங்கொடை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தன் மேற்கல்வியை மேற்கொண்டார்.

வாலிபனாக ஊர் வந்த யோகதாஸ் அவர்கள் அம்பிகைபாகன் அவர்களின் மகளான ஜெகதாம்பிகை அவர்களை காதல் கொண்டார். 1974 ஆம் ஆண்டு இவர்களது திருமணம் நடைபெற்றது. இவர்களது இல்லறத்தின் பேறாக ரஜனிகாந், ஜான்சிராணி, அருண், அசோக்காந், றபேக்கா ஆகிய பிள்ளைகளை பெற்றுக் கொண்டார்கள். க.பாக்கியராசா அவர்களுடன் இணைந்து மேசன் தொழிலில் ஆரம்பத்தில் ஈடுபட்டு வந்த இவர் பின்னர் வவுனியாவில் இருந்து சைக்கிளில் அரிசி ஏற்றி வந்து அரிசி வியாபாரம் செய்து வந்தார். தளராத மனம் கொண்டவராக செய்யும் தொழிலில் சுறுசுறுப்பாக இயங்கிய இவர் 1983 இல் தொழில்தேடி சவுதி அரேபியா வுக்கு சென்றார். மீள 1986 இல் இலங்கைக்கு வந்த இவர் இங்கு போராட்ட இடர்களால் அவதியுற்று மீள 1987 மார்கழி மாதம் குவைத் நாட்டிற்கு தொழில் தேடி சென்றார். அங்கு பெற்றோல் செட் சாரதியாக கடமை



யாற்றினார். அங்குள்ளவர்கள் இவரை செல்லமாக "தாஸ்" என்று அழைத்தார்கள். குவைத் நாட்டில் பெரும்பான்மையான மதமாக முஸ்லிம் மதமே காணப்பட்டது. அவர்கள் மீது ஈர்ப்புக் கொண்டு அங்கு வாழ்ந்த காலத்தில் முஸ்லிம்முறைப்படி சடங்காசாரங் களை அனுசரித்து "அப்துல் முஹமது" என்னும் பெயரையும் பெற்றுக் கொண்டு அல்லாவை 5 வேளை யும் தொழுதுவந்தார். முஸ்லிம்கள் பலரது விருப்பிற் குரியவராகவும் நம்பிக்கைக்குரியவ ராகவும் விளங் கினார். அரபு, ஹிந்தி, மலையாளம் போன்ற மொழி களை விருப்புடன் கற்று அவற்றை பேசக் கற்றுக் கொண்டதோடு, அரபுப் பண்பாட்டால் கவரப்பட்டு அரபு மொழியை சிறப்பாக கற்று மிகச்சரளமாக அரபு மொழியை கதைக்க கூடியவரானார். மீள 2002 இல் இலங்கை வந்த வேளை குவைத் - ஈராக் போர் காரண மாக இலங்கையிலேயே குடும்பத்தாருடன் தங்கி வாழ் கின்றார்.

4 ம் வகுப்பு படித்த காலத்தில் அரியாலை ராமநாதன் அவர்களின் இயக்கத்தில் மேடையேறிய "கர்ணன்" நாடகத்தில் "குந்தி" பாத்திரம் ஏற்று முதன் முதலில் நடித்தார். அரியாலையில் பண்டாரவன்னியன் நாடகத்தை வீரத்திலகன் என்னும் பெயரில் மேடை யேற்றினார்கள். அந்நாடகத்தில் வீரத்திலகன் பாத்திர மேற்று பலரது பாராட்டையும் மதிப்பையும் பெற்றுக் கொண்டார். பல இடங்களில் அடங்காப்பிடாரி நாடகம் மேடையேறுவதற்கு முன்னர் இந்நாடகத்தை யும் மேடையேற்றினார்கள். இந்நாடகத்தில் நடித்த காரணத்தால் நட்புவட்டத்தில் இவரை பண்டார வன்னியன் என அன்பாக அழைத்தார்கள். "கன்னிக் கோட்டை" என்னும் நாடகத்திலும் நடித்தார்.

அல்வாயில் மா. கணேசலிங்கத்தின் "வீர பாண்டிய கட்டப்பொம்மன்" நாடகத்தில் நடித்தார். தொடர்ந்து அண்ணாவியார் கிருஷ்ணபிள்ளை அவர்களின் நெறியாள்கையில் காத்தவராயன் கூத்தில் "காத்தான்" பாத்திரம் ஏற்று நடித்தார். இவ்வாறு நடித்து வந்த இவருக்கு அண்ணாவியார் கலாநிதி த. கலாமணி அவர்களின் அண்ணாவியத்தில் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் யமனாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு






மிகச்சிறப்பானதொரு நடிகனாக தன்னை வெளிக் காட்டினார். யமன் பாத்திரத்தை சரியாக உணர்ந்து அதற்கு தகுந்த வகையில் தன் நடிப்புத்திறனை வெளிப் படுத்தி பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டார். இந்நாடகத்தில் கலாநிதி த. கலாமணி அவர்கள் சாவித்திரியாக நடித்தார். சாவித்திரி யமன் தர்க்கப் பாடல்களை மிகச்சிறப்பாக பாடி இரசிகர்களை கவர்ந்தார். யோகதாஸ் அவர்கள், "கலாமணி சேர் தான் என் ஆற்றலை சரியாக இனங்கண்டு, என்னை சரியாக வளப்படுத்தி நல்லதொரு ஆற்றுகையை மேற் கொள்ள உதவினார்" என aavanaham.org இல் வாய்மொழி வரலாற் றில் குறிப்பிட்டுள்ளார். த.கலாமணி அண்ணாவியத்தில் வாலிவதை நாடகத்திலும் நடித்தார். மேலும் "பாசத்துக் கொரு பரதன்" நாடகத்தில் பரதனாகவும், பவளக்கொடி நாடகத்தில் தர்மராகவும் நடித்தார். அண்மையில் மாதனை சேகர் நெறிப்படுத்திய காத்தவராயன் கூத்து நாடகத்தில் காத்தானாக நடித்து பலரது பாராட்டைப் பெற்றுக் கொண்டார். மேலும் "ராஜாதேசிங்" நாடகத்தி லும் நடித்து தன் ஆற்றலை வெளிப்படுத்தினார். எஸ்.ஜி.சாந்தன் -செல்வரத்தினம் குழுவுடன் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் பல மேடைகளில் யமனாக நடித்துள்ளார். "தூரம் அதிகம் இல்லை" என்ற சமூக நாடகத்தை நம் ஊர் பிள்ளைகளை வைத்து இயக்கியும் உள்ளார். அல்வாய், அல்வாய் வடக்கு, அரியாலை, அல்லைப்பிட்டி, ராமநாதன் கல்லூரி, மானிப்பாய், அராலியூர் என பல இடங்களில் இவர் நடித்த நாடகங்கள் மேடையேறின. இவர் நடித்த நாடகங்கள் பலவற்றிலும் இவர் "ராஜபார்ட்" வேடங்களையே தாங்கி நடித்தார் என்பதும் பெருமைக்குரியது.

2017 ஆம் ஆண்டு அரியாலையில் சிவராத்திரி தினத்தன்று இவரையும் மேலும் சில கலைஞர்களையும் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

மதம் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உடைய இவர். திருக்குரானை முழுமையாகப் படித்துள்ளார். அமைதியான வாழ்வை வாழ்ந்துவரும் இவர் எமது ஊரின் கலைப் பாரம்பரியத்தில் குறிப்பிடக்கூடிய ஒருவர் என்றால் அது மிகையான கூற்றன்று.

# அல்வாய் அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான திருத்தல வரலாறு

■ கலாநிதி த.கலாமணி ■



எமது அல்வாய்க்கிராமத்தின் வடபால் எல்லையில் அமைந்திருக்கும் ஆலயமே "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்". இன்று புதுப்பொலி வுடன் அலங்கார உற்சவமும் காணும் இந்த ஆலயம் இருநூறு வருடங்களுக்கும் மேலான தொன்மை உடையது. பிதிர் வழி யாக ஆறு தலை முறைகளாக குலதெய்வமாக ஆதரிக்கப்பட்டு, வழிபடப்பட்டு வரப்படும் "காத்தவராயர்", வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயராக மாற்றம் கண்டிருப்பதானது கால மாற்றத்தினாலாகும். ஆனாலும் காத்தவராயரின் தெய்வீகத் தன்மை அரசோச்சும் விதமாக ஆலயம் பேணப்பட்டு வருவது காத்தவராயரின் அருளாட்சிச் சிறப்பினாலாகும்.

எங்கள் குலதெய்வமாக என்றும் விளங்கும் காத்தவ ராயர் கோயிலின் தோற்றத்திற்குக் காரணகர்த்தர் எமது பிதிர் வழியான ஆறுதலைமுறைத் தொடர்ச்சியின் முதல்வரான கதிரன் ஆவார். 1800 களின் முற்கூறில் பிறந்த இவர் எழுத்தறி வுள்ளவராக விளங்கியதோடு, சமய அனுட்டானங்கள், புராணக்கதைகள் என்பவற்றைத் தெரிந்தவராகவும் இருந்தார். எமது கிராமத்தின் எழுத்தறிவுப் பாரம்பரியத்தின் தொடக்கப் புள்ளி களில் ஒருவராக, முதன்மையானவராக இவர் விளங்கியிருக்க வேண்டும் என்பதை இவரின் வாழ்வே நிரூபணம் செய்கிறது. இவர் தனது ஆண் பிள்ளைகளுக்கு காத்தான், வேலன் என்றே பெயரிட்டார். காத்தான் அவர்கள் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞ ராக விளங்கினார் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. வேலன் அவர்கள் கல்வியிற் சிறந்து விளங்கி எமது ஊரின் முதலாவது சட்டம்பியார் ஆனதோடு, சோதிடத்திலும் வல்லவராக சிறப்புப் பெயர்களால் சுட்டப்பட்டு வந்தார். கதிரன் அவர்கள் காத்தவரா யரைக் குல தெய்வமாகக் கொண்டமைக்கு, அவர் தொழில் நிமித்தம் அயலூர்த் தொடர்புடையவராகவும் கலைகளிலே ஆர்வ முள்ளவராக வும், குறிப்பாக கூத்துக்கள் நடைபெறும் இடங்களுக் குச் சென்று அவற்றைக் கண்டுகளித்து வந்தவராகவும் இருந்தமையே காரணம். இவ்வாறு அவர் பார்த்த கூத்துக்களிலே சிந்து நடைக் கூத்தான "காத்தவராயன் கூத்து" கதிரன் அவர்களைக் கவர்ந்தது. பெருகி வரும் கங்கை ஆற்றைத் தனது ஒற்றைக் காலால் தடுத்து நிறுத்தி முத்துமாரி அம்மனைக் காத்த பாலன் கதிரனின் நெஞ்சில் நிறைந்தான். தனது பாலன் கங்கையிட மிருந்து காத்தமையால் "காத்தான்" என்று முத்துமாரியே அவனுக்குப் பெயரிட்ட காட்சியைப் பல மேடைகளிலும் கண்டு களித்த கதிரன் அவர்கள் காத்தானையே தமது குலதெய்வமாக வரித்துக் கொண்டார். அதேவேளை, அதேகாலப்பகுதிக்குச் சற்று முன்பாக நிறுவப்பட்டிருந்த அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலும் கதிரன் அவர்கள் வணங்கும் தலமாக இருந்தது.

அல்வாய் முத்துமாரி அம்மன் நிறுவப்பட்டிருந்த வேவி லந்தைக்காணி கதிரன் அவர்களும் அவர் தம் உறவினர்களும் வாழ்ந்து வந்த குடியிருப்புப் பகுதிக்கு ஈசானத்திசையில் கூப்பிடு தொலைவில்(சுமார் 300 மீற்றர் தூரத்தில்) அமைந்திருந்தது. அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலின் தோற்றம் பற்றி வரலாற்றுக் கதை ஒன்றுண்டு. அந்நாளில் தமிழர் பிரதேசத்தை வன்னி மன்னர் ஆட்சி செய்தவேளை நில உடைமையாளர்களுள் ஒருவராக இருந்த மணிவீரபாகு தேவன் அவர்களின் மரபிலே தோன்றிய வீரமாப்பாண முதலியாரின் மகளான உடைச்சி வள்ளி நாச்சியார் அவர்கள் வாழ்ந்த காலத்தில் "அக்கம்மா என்ற பெண் தெய்வத்தின் மாயங்கள் பற்றியும் அதீத சக்தி பற்றியும் பேசப்பட்டு வந்தது. வள்ளி நாச்சி சக்தி வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும் ஆண்டு தோறும் மதுரை மீனாட்சிஅம்மன் கோயிலுக்குச் சென்ற வருபவராகவும் இருந்தார். ஒரு சமயம் அங்கிருந்து அம்மன் சிலை ஒன்றை வாங்கி வந்து தன் வீட்டில் வைத்து வள்ளி நாச்சி வணங்கி வந்தவேளை, அவரது கனவில் தோன்றிய மூதாட்டி ஒருவர் வேம்பும் இலந்தை யும் இணைந்திருக்கும் வேவிலந்தைக்காணியிலே தம்மை இருத்தி வழிபட்டு வருமாறு கூறினாராம். காத்தான் கூத்தை விரும்பிப் பார்த்து வந்த வள்ளி நாச்சி ஏற்கெனவே மாயக்கை எனும் இடத்திலிருந்த "மாய அக்கையை"(அக்கம்மா எனும் பெண் தெய்வம்) தவறாது வணங்கி வந்தவர். காத்தான் கூத்தில் சித்திரிக்கப்படும் முத்துமாரி அம்மன் வெப்பு நோய்களைத் தீர்க்கும் தெய்வமாக உணர்த்தப்பட்டதனால் முத்துமாரி அம்மன் மீது ஆராக்காதல் கொண்டிருந்தார். எனவேதான் முத்துமாரி அம்மனுக்கு கோயில் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற விருப்பம் கொண்டவராகவும் இருந்தார். அவரது கனவில் தோன்றிய மூதாட்டி, வேம்பு தான் சக்தி என்றும் இலந்தை தான் சிவம் என்றும் கூறி சிவமும் சக்தியும் இணைந்திருந்த வேவிலந்தைக் காணியிலேயே தனக்குக் கோயில் அமைக்கு மாறும் கேட்டிருந்த தனால் தமக்குச் சொந்தமான வேவிலந்தைக் காணியில் ஒரு கொட்டில் அமைத்து, மதுரையிலிருந்த கொண்ட வந்திருந்த அம்மன் சிலையை வைத்து விளக்கு வைத்து வணங்கி வந்தார். வள்ளி நாச்சியின் கனாத்திறனின் பேறாக உருவான வேவிலந்தை முத்துமாரி அம்மனை ஊரவரும் அயலூரவரும் நெஞ்சார வணங்கி வந்தனர். இந்தக் கோயிலில் நாளடைவில் அம்மனோடு சேர்த்து சூல வடிவில் காத்தானையும் நிறுவி வணங்கி வரும் வழக்கம் தொடர்ந்தது.

இவ்வரலாறுகளை அறிந்திருந்த கதிரன் அவர்கள் தாமும் உறவினர்களும் குடியிருந்த காணிப்பகுதியில் சூலங்களில் உருவேற்றிய காத்தானையும் பணிக்கரையும் ஒதியமரம் ஒன்றின் கீழ் நிறுவி வணங்கி வரத் தொடங்கினார். காலகதியில் திருத்தண்டில் உருவேற்றிய ஆதி விநாயகரும் வழிபாட்டுக்குரிய வரானார். இத்தெய்வங்களுக்கு விளக்க வைத்து ஆனி உத்தரத்தின்போது மடையும் படைக்கப்பட்டது. கதிரன் அவர் களும் அவரின் பிள்ளைகளான காத்தான், வேலன் (வேலுச்

சோதிடர்) ஆகியோரும் விளக்கு வைத்து வந்தனர். பின்பு வேலுச் சோதிடரின் மகனான தம்பையாச் சோதிடரும் காத்தானின் மகனான சபாபதியும் விளக்கு வைத்தனர். ஆனால், அதன் பின்னர் கதிரனின் பரம்பரைத் தொடர்ச்சியில் சபாபதியின் மக்களான தியாகு, சிவகுரு, தம்பிஜயா ஆகியோர் விளக்கு வைத்து வந்தனர். இக்காலத்தில் ஒதிய மரத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த தெய்வங்களுக்குக் கொட்டில் அமைத்து பின்பு சுண்ணாம்பினாலான கட்டடம் அமைக்கப்பட்டது. கதிரனின் பிதிர் வழி உறவினர்க்கும் ஏனைய உறவினர்க்கும் திருவெம்பாவைப் பூஜைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆண்டு தோறும் திருவெம்பாவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு நித்திய விளக்கும் நித்தியப் பூஜையும் ஆனி உத்தரப் பொங்கலும் திருவெம்பாவைப் பூஜைகளும் இடம்பெற்று வந்தவேளை இவற்றுக்கான பொறுப்பு தம்பிஜயா அவர்களிடமே கையளிக்கப் பட்டிருந்தது. சுண்ணாம்புக் கட்டடம் இரு மண்டபங்கள் கொண்ட சீமேந்துக் கட்டடமாக மாற்றப்பட்டது. தம்பிஜயா அவர்களைத் தொடர்ந்து தம்பிஜயாவின் மகனான நானும்(கலாமணி) என்னைத் தொடர்ந்து என் மகனான பரணீதரனும் காத்தானுக் குப் பூஜை செய்து கோயிலைப் பரிபாலனம் செய்யும் பேறு பெற்றோம். இரண்டு மண்டபங்களுடன் கூடிய காத்தான் கோயிலை விஸ்தரித்து இன்று மணிக்கோபுரம் காணப்படும் எல்லை வரை மண்டபங்களை அமைக்க வேண்டும் என்ற கனவு என் தந்தையிடம் இருந்தது. அவரின் அந்திம காலத்தில் என் தங்கை கீதாமணியிடம் அக்கனவு பற்றிக் கூறியிருந்தார்.


எனக்கும் காத்தான் கோயிலைப் புனரமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அல்வாய் சாமணந் தறைப் பிள்ளையார் கோயிலின் குருக்களாக இருந்த சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள்(கண்ணன் ஐயா) மாபலிபுரத்திலிருந்து எடுத்து வந்திருந்த ஐந்து விநாயகர் விக்கிரகங்களுள் ஒன்றை 2003 ஆம் ஆண்டில் பரணீதரனிடம் கையளித்தார். அன்று முதல் சுமார் எட்டு வருடங்களாக எமது வீட்டில் வைத்துப் பூசிக்கப்பட்டது. 2011 ஆம் அண்டு தைப்பூசத் தினத்தன்று கோயிலைப் புனரமைப்பதற்காக புதிய கட்டடத்திற் கான அத்திபாரக்கல் இடப்பட்டது. காத்தானின் அருளால் குறுகிய காலத்திலேயே கட்டட வேலைகள் பூர்த்தியாகி 06.06.2011 இல் மஹா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. மூலஸ்தானத்திலே மாபலி புரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வரசித்தி விநாயகர் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டு ஆதி விநாயகர் திருத்தண்டும் மூலஸ்தானத் திலேயே நிறுவப்பட்டது. ஐந்து மாதங்களாக பாலாலயத்தில் வைக்கப்பட்டிருந்த காத்தவராயர், பணிக்கர் திருத்தண்டுகள் மூன்றாவது மண்டபத்தில் நிறுவப்பட்டன. இவ்வாறாக ஆலயத் தைப் புனரமைத்தபோது பீடம், நிலையம், அளவுப்பிரமாணங் கள் யாவும் வரசித்தி விநாயகர் விக்கிரகப் பிரமாணத்துக்கு அமைய சைவப்புலவர் சோதிடர் சிவஸ்ரீ ம.ச.வேதாரணியக் குருக்கள் அவர்களாலேயே நிர்ணயிக்கப்பட்டன.

எங்கள் குலதெய்வமான காத்தானின் பெயர் துலங்க ஆலயத்திற்குப் பெயரிடவேண்டும் என்ற எங்கள் விருப்பின் பெயரில் "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்" என்ற பெயர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ் கந்தரா ஜாக் குருக்களின் ஆலோசனையுடன் சூட்டப்பட்டது. கும்பாபிஷே கத்தை சிவஸ்ரீ சோமாஸ் கந்த ராஜாக் குருக்களே சிறப்பாக நிறை வேற்றித் தந்தார். எனது மகன் பரணீதரன் அர்ச்சகராகப் பொறுப் பேறறு ஆலயத்தின் பரிபாலனத்தையும் ஏற்றுக் கொண்டார்.

பரணீதரன் இத்தேவஸ்தானத்தை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் விளங்கி, 2019 இல் அலங்கார உற்சவம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தார். ஐந்தாவது உள் மண்டபமும் வசந்த மண்டபமும் வைரவர் ஆலயமும் மகாவிஷ்ணு ஆலயமும் நிறுவப்பட்டு, ஆவணி மாத பூசத்தினத்தை தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு, எமது ஊரவரான உறவினர்களுக்கு பத்துத் திருவிழாக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டு அலங்கார உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தொடர்ந்து 2020, 2021 ஆகிய ஆண்டுகளிலும் ஆலயத்தில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு, அலங்கார உற்சவம் தொடர்ச்சியாக ஆண்டு தோறும் இடம்பெற்று வருகிறது. திருவிழாக்காலங்களில் மட்டும் சைவக்குருக்கள் ஒருவர் பூஜைக்கென அழைக்கப்படுவதோடு, நித்திய பூஜைகளும், விசேட பூஜைகளும் பரணீதரன் அவர்களாலேயே நிறை வேற்றப் பட்டு வருகின்றன. பரணீதரன் அவர்கள் சைவராகி சமயதீட்சை யும் பெற்றவர். மாதாந்த பூசம், நவராத்திரி போன்ற பூஜைகளும் உறவினர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றன.

எங்கள் முப்பாட்டன் கதிரன் அவர்களால் ஏறத்தாழ இருநூறு ஆண்டு களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட காத்தான் வழிபாடு 2011 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் வரை விளக்கு வைத்தல், நித்திய விளக்கு வைத்தலுடன் பூஜையும் செய்தல் ஆகியவற்றோடு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததனால், எமது உறவினர் களும் ஊரவர் களும் என பலர் எங்கள் சந்ததியினர்க்கு துடக்கு ஏற்பட்ட காலங்களில் விளக்கு வைக்கும் பேறு பெற்றனர். குறிப்பாக, க.மார்க்கண்டு, அவரின் பிள்ளைகள் நகுலேஸ்வரன். கலாநிதி, சி.பரஞ்சோதி, மா.சிவதாசன், மா.கருணாநிதி, க.மகேசன், கி.விக்னேஸ்வரன், க.கமலேந்திரன் ஆகியோர் விளக்கு வைத்துள்ளனர். இப்பட்டியலில் மேலும் பலரை உள்ளடக்கலாம்; அவர்கள் குறித்த ஒரு நாள் அல்லது சில நாட்கள் விளக்கு வைத்துள்ளார்கள். அதேவேளை, கதிரன் அவர்களின் பரம்பரைத் தொடர்ச்சியில், ஒவ்வொருவரதும் பிள்ளைகளுக்கும் அவர்கள் திருமணம் செய்யாமல் சிறுவர்களாகவும் இளைஞர் களாகவும் இருக்கும் வரை காத்தானுக்கு விளக்கு வைத்திருக் கின்றார்கள். இவ்வகையில் கதிரன் அவர்களும் கதிரன் அவர்களின் பிள்ளைகளான காத்தார், வேலன் ஆகியோரும் காத்தாரின் பிள்ளைகளான சபாபதி, கதிர்காமு, சுந்தரம் ஆகி யோரும் வேலனின் பிள்ளைகளான தம்பையாவும் சபாபதியின் பிள்ளை களான தியாகு, சிவகுரு, தம்பிஜயா ஆகியோரும். தம்பி ஐயாவின் பிள்ளையான நானும்(கலாமணி) எனது பிள்ளைகளான பரணீ தரன், முரளீதரன், மதனாஹரன் ஆகியோரும் காத்தானுக்கு விளக்கு வைத்து வந்த, எமது சந்ததியிலுள்ளவர்கள் ஆவர். ஆனி உத்தரப் பொங்கல் தினத்தன்று "காத்தான் கூத்து"(சிந்து நடைக் கூத்து) அண்மைக் காலமாக கோயிலில் மேடையேற்றப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.மிருக வேட்டைக்காக எமது சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு சென்று வருகின்றார் எமது வரசித்தி விநாயகர். மேலும் திருவிழாக் காலங்களில் சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருவதுடன் "காத்தவராயர் மான்மியம்" என்னும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்ஆலயத்திற்கான திருவூஞ்சல் என்னால் (கலாமணி) பாடப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஏறத்தாழ இருநூறு வருடங்களாக விளக்கு வைத்தலுடனும் ஆனி உத்தரப் பொங்கலுடனும் திருவெம் பாவைப் பூஜைகளுடனும் படிப்படியாக அபிவிருத்தி கண்டு வந்த காத்தான் கோயில், 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்" என்ற பெயரில் பெரு வளர்ச்சி கண்டிருப்பது காத்தானின் மகிமையன்றி வேறில்லை. மேலும் மேலும் எமது ஆலயம் வளர்ச்சிபெற வரசித்தி விநாயகரதும் காத்தானதும் திருவருள் எமக்குத் துணை நிற்கும்.



## அஞ்சலி
## திரு முருகன் குலரத்தினம்
**19.6.1936 - 20.10.2021**

கல்வி, கலை, கலாசாரத்தோடு பல பண்பாட்டியல்பு களைக் கொண்ட எமது கிராமத்தின் கேவோலைப் பகுதியில் “பொன்முருகன் இல்லம்” என்ற மனையினை அமைத்து முருகன் குலரத்தினம அவர்களும் அவரது சகோதரர் அமரர் முருகன் நவரத்தினம் அவர்களும் ஒன்றாக வாழ்ந்தார்கள். இவர்கள் தந்தையுடன் வாழ்ந்த காலம் மிகுந்த பொற்காலமாகும். எமதூரில் செல்வச்செழிப்பு மிக்க குடும்பங்களில் இவர்களது குடும்பமும் ஒன்றாகும். இவர்கள் அக்காலத்தில் எமதூரில் முதன் முதலில் சொந்தமாக ஒலிபெருக்கி சாதனங்களை வைத்திருந்த பெருமை இவர்களுக்குரியதே. எமதூரிலும்சரி, அயற்கிராமங் களிலும் சரி நன்மையான நிகழ்வுகளில் இவர்களின் சாதனங்களே இசைகூட்டி மெருகூட்டும். அதுமட்டுமன்றி இவர்களது இல்லத்தினை தேடி வருபவர்களை வரவேற்று உபசரிப்பதில் இரண்டு குடும்பங்களும் புளகாங்கிதம் கொண்டி ருந்தனர். இரண்டு சகோதரர்களும் ஒன்றாக சேர்ந்து தொழில் புரியும் இடங்களுக்கு சென்று வருவார்கள். இராமனுக்கு இலக்குமணன் போல அண்ணனுக்கு தம்பியாக இவர் கூடவே இருந்தார். இவரது சகோதரன் இவரை ஒரு பொழுதும் தம்பி என்று அழைப்பதில்லை. மாறாக “ராசா” என்றே அழைப்பார். குடும்பத்தினர் எல்லோரும் ராசா என்று அழைப்பதால் இவருக்கு குலராசா என்று இன்னொரு பெயரும் உண்டு.

அமரர் குலரத்தினம் அவர்கள் இயற்கைவளம் ஒருங்கே அமைந்த கிளிநொச்சிப் பிரதேசத்தின் திருவையாற்றுப் பகுதியில் காணியினைப் பெற்று அங்கு குடும்பத்தோடு சென்று வாழ்ந்தார். இந்தக்காணியானது கிட்டத்தட்ட மூன்று ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாக அமைந்திருந்தது. இந்தக் காணி யினுள் மண்ணாலான பெரிய வீடு வாசல் அமைத்ததோடு கிணறு வெட்டி காணியினுள் பயன்தரு மரங்கள் மற்றும் பழ மரங்களுடன் சந்தைப்படுத்தலுக்குரிய மரக்கறிவகைகளையும் பயிரிட்டு வந்தார்கள். பயிர்த்தொழில் மூலம் தங்களுடைய குடும்ப வளங்களை பெருக்கியிருந்தார். இவற்றுக்கெல்லாம் உறுதுணையாக இவரது மனைவியும் பிள்ளைகளும் இருந்தார்கள். இவர்களது ஐந்து பிள்ளைகளில் கடைசி மூன்று பிள்ளைகளாகிய திருமதி பொன்மதி இராஜேஸ்வரன். திருமதி செல்வமதி தர்மலிங்கம், திரு குகேந்திரன் ஆகியோர் கிளி நொச்சிப் பிரதேசத்தில் கல்வி கற்று கல்வியில் உயர் வடைந்தார்கள்.

எனது தந்தையும் இவரது தந்தையும் ஆண்வழி சந்ததியூடான சகோதரர்கள் ஆவார். துடக்குமுறைகளுக்கு உரித்துடையவர்கள். எமது மதத்தின் படி ஆண்சந்ததியினர் களுக்கான துடக்கு முறைகள் ஏழு தலைமுறைகளுக்கு கடைப் பிடிக்க வேண்டும். எமது முன்னோர்கள் அதனை ஒழுங்கு முறையாகப் பின்பற்றியிருந்தார்கள். இப்பொழுது தங்கள் வசதிக் கேற்ப பெரும்பாலான குடும்பங்களில் துடக்கு முறைகளைப் பின் பற்றி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் எனக்கு நியமனம் கிடைத்தது. விவசாயபீடம் இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள வேறொரு நிறுவனத்தின் வளவிலே தற்காலிகமாக இயங்கி வந்தது. அன்றைய காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் யாழ்மாவட்டத்திலிருந்து வேறு பிரதேசங்களுக்கு துவிச்சக்கரவண்டிகளில் தான் தங்களுடைய பிராயணங்களை மேற் கொண்டிருந்தனர். சிலர் பெற்றோலுக்கு பதிலாக மண்னெண்ணெய் பாவித்து மோட்டார் சைக்கிள்களில் பிரயாணங்களை மேற் கொண்டு வந்தார்கள். அமரர் குல ரத்தினம் அவர்களை சின்னண்ணை என்று தான் அழைப்பேன். விவசாயபீடத்தில் எனக்கு நியமனம் கிடைத்தது பற்றி அவரிடம் கூறியபோது அவர் கூறிய வார்த்தை “தம்பி இங்கு வந்து வேறிடத்தில் தங்க வேண்டாம். எனது வீட்டில் தங்கியிருந்து வேலைக்குப்போகலாம்.” நான் அவர்களுடைய வீட்டில் தங்கி யிருந்து வேலைக்குச் சென்று வருவேன். இவரது மனைவி செல்வமலர் அவர்களை சின்னண்ணி என்று தான் அழைப்பேன். தினமும் நான் வேலைக்குச் செல்லும்போது உணவு தந்துதான் அனுப்புவார். பின்பு எனது குடும்பத்தோடு அவர்களுடன் தங்கியிருந்தேன். நாங்கள் அவர்களோடு தங்கியிருந்த காலத்தில் தான் எனது மூத்த மகனான மிதுரனின் முதலாவது பிறந்த தினம்(6.4.1992) இவர்களது வீட்டில் கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர்களது உறவுகள் பலர் வேறு மாவட்டங்களுக்கு பிரயாணம் செய்யும் வேளையில் இவர்களது வீட்டில் வந்து தங்கியிருந்து செல்வார்கள். அவர்கள் எல்லோரையும் இன் முகத்துடன் வரவேற்று உபசரித்து அனுப்புவதைக் காணக்கூடிய தாக இருந்தது.

கணவனும் மனைவியும் ஏக காலத்தில் சுகயீனமுற்ற வேளையிலும் இவரது துணைவியார் சுமங்கலியாக இறைபதம் அடைந்து முப்பத்து மூன்று நாட்களின் பின்பு இவரும் இறைவனடி சேர்ந்தமை இல்லறவாழ்வில் இவர்கள் வாழ்ந்த பாசப் பிணைப்பை எடுத்துக் காட்டுகின்றது. மூத்த மகனை வெளி நாட்டுக்கு அனுப்பியும், மற்றைய பிள்ளைகளை அரசசேவை களில் இணைத்தும் பிள்ளைகளுக்கு நல்ல மருமக்களையும் கல்வியில் சிறந்து விளங்கும் பேரப்பிள்ளைகளையும் கண்டு இன்புற்று நிறைவான வாழ்க்கையினை வாழ்ந்து இறைவனின் பாதாரவிந்தங்களைச் சென்றடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா ஈடேற்றத்துக்காக எல்லாம் வல்ல ஆலடி பாலகணபதியையும் வைரப்பெருமானையும் பிரார்த்தித்துக் கொண்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறுகின்றேன்.

சென்று வாருங்கள் சின்னண்ணை
சாந்தி! சாந்தி ! சாந்தி!

**- கணபதிப்பிள்ளை வரதவேல்**



## அஞ்சலி
**திருமதி சிவலோகநாயகி ஆறுமுகம்**

**28.9.1938 - 26.10.2021**

எண்பத்து மூன்று ஆண்டுகளாக இம் மண்ணிலே வாழ்ந்து 26.10.2021 செவ்வாய்க்கிழமை காலை 5.05 மணியளவில் இயற்கை எய்திய திருமதி சிவலோகநாயகி ஆறுமுகம் அவர்களின் இழப்பானது மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள் மனங்களில் பெருந்துயராய் இறங்கியுள்ளது.

இவர் அல்வாய் மனோகரா தனத்தியவத்தை குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் கணபதி குழந்தை அன்னக்குட்டி தம்பிகளின் ஏகபுதல்வி ஆவார். சைவநெறி நின்று வாழ்ந்த பெற்றோர் தமது புதல்விக்கு சிவலோகநாயகி என்ற நாமத்தைச் சூட்டி மகிழ்ந்தனர்.

28.09.1938 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.தேவரையாளிச் சைவ வித்தியாசாலையில் (தேவரையாளி இந்துக்கல்லூரி) கற்றார். செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தவரான இவரை சமவயதை ஒத்தவர்கள் சிவலோகம் என்றும் இளைய வயதினர் சிவலோகம் அக்கா என்றும் அன்பொழுக அழைத்து வரலாயினர். சிவலோகம் என்றதும் எல்லோர் மனங்களிலும் நினைவுக்கு வருவது அவரது சமயல் கைப்பக்குவமும் அன்பு கலந்த வரவேற்பும் இனிய விருந்தோம்பலும் ஆகும். எவ்வேளையிலும் அன்னத்துக்கு குறைவில்லாது வாழ்ந்த குடும்பம் குழந்தை அன்னக்குட்டி குடும்பம் என்பது மிகையான கூற்று அல்ல.

சிவலோகநாயகி அவர்களுக்கு திருமண காலம் பொருந்தி வர தமது உறவினரான வதிரி ஆரியன் வளவு அன்னை இல்லத்தைச் சேர்ந்த N.M.ஆறுமுகம் அவர்களை பெற்றோரும் உறவினர்களும் இணைந்து 1953ம் ஆண்டு மணம் முடித்து வைத்தனர். இவர்களின் மணவாழ்க்கையின் பயனாக நான்கு பெண் பிள்ளைகளும் மூன்று ஆண்பிள்ளை களும் கிடைக்கப் பெற்றனர். அவர்கள் முறையே திருமதி செந்தமிழ்ச்செல்வி செல்லத்துரை, இராஜமோகன், திருமதி பொற்செல்வி யோகராசா, திருமதி மலர்ச்செல்வி கணேசன், வசீகரன், திருமதி மேகலா செல்வராசா, சிவகுமார் ஆகியோரா வர். பிறந்த இடத்து மக்களையும் புகுந்த இடத்து மக்களையும் நேசித்து வாழ்ந்த இக் குடும்பத்தினர் தமது அயல் உறவுக் கிராமமான தேவரையாளி (யங்லயன்ஸ்) மற்றும் வதிரி மேற்கு (பொம்பேர்ஸ்) கிராமத்துடனும் மிக நேர்த்தியான உறவைப் பேணி வந்தனர். இதனால் இவர்களின் அன்ன அகம் இல்லம் ஆனது எப்பொழுதும் களைகட்டியிருந்தது. இன்று அன்ன அகம் என்ற ஒற்றைக்குடில் ராஹஜஸ்வர்யம், செந்நிருஜம், மலரகம், நிந்துஜம் ஆக விரிந்து காணப்படுவது அமரர் அவர்களின் ஆளுமைக்கும் இறை நம்பிக்கைக்கும் கிடைத்த வெற்றியாகும். எல்லாப்பிள்ளைகளையும் தனித்தனியே குடில் அமைத்து குடியமர்த்தி மகிழ்ச்சி கண்டவர் பிற்காலத்தில் இளைய மகளுடன் "நிந்துஜம்" இல்லத்தில் வாழ்ந்து வந்தார். அங்கு வாழுங் காலத்தில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் அவரைச் சென்று பார்த்து மனம் குளிர பேசி மகிழ்ந்து வந்தார்கள். இவ்வாறு இருக்க எல்லாப் பிள்ளைகளும் சில நாட்கள் "நிந்துஜம்" இல்லத்தில் தங்கி வாழும் சூழ்நிலை ஏற்பட்ட போது அவரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இத்துடன் மூத்த மகன் இராஜமோகன் அவர்களின் வருகைச் செய்தியும் அவரின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியம். மகிழ்ச்சியின் உச்சம் மரணமோ என்றெண்ணுகின்ற அளவுக்கு ஆரோக்கியமாக இருந்தவர் திடீரென 24.10.2021 அன்று நோயினால் பீடிக்கப்பட்டு இரண்டாம் நாள் 26.10.2021 அன்று யாழ் போதனா வைத்தியசாலையில் காலமானர். 01.11.2021 அன்று மகன் இராஜமோகன் அவர்கள் ஊர் வந்து சேர்ந்தார். இறுதிவரை மகனின் வருகையை ஆவலுடன் காத்திருந்த வேளையில் காலன் கயிற்றை வீசியது உறவுகளுக்கு பெருங் கவலையே ஆயினும் அதிலும் ஒரு அர்த்தம் பொதிந்திருந்திருக்கின்றது. அமரர் அவர்களின் கணவர் N.M.ஆறுமுகம் அவர்கள் 26.10.2002 இல் காலமானர் அமரர் சிவலோகநாயகி அவர்கள் 26.10.2021 இல் காலமானார். இருவரும் ஒரு மாதம் ஒரு திகதியில் மரணத்தைத் தழுவியது என்பது இயல்பாக அமைந்தது என்றாலும் சிந்தனைக்குரியது. என்னதான் இருந்தாலும் எத்தனை பேர் அன்ன அகத்தின் கிளையில் இருந்து முகிழ்து வந்தாலும் அமரர் சிவலோக நாயகி அவர்களின் வெற்றிடத்தை எவராலும் நிரப்ப முடியாது என்பதை உறுதிபடச் சொல்வேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு, எமது ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- கணேசன் மதுஷன்**

---

### அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையாவின் 115 வது ஜனன நிகழ்வும் மாணவர்களுக்கான கௌரவிப்பும்





எமது சமூக முன்னோடியும் பல நிறுவனங்களின் ஆரம்ப கர்த்தாவும், தலைமையாசிரியரும் சோதிடரும் எமது கிராமத்தின் முதல் அரசநியமனம் பெற்ற ஆசிரியருமாகிய அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையாவின் 115வது ஜனன நிகழ்வும் மாணவர்களுக்கான கௌரவிப்பும் அவரது பிறந்ததினமான வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் "திரு இரத்தினவாசம்" அல்வாய் (திரு.திருநாவுக்கரசு செல்வநாதன் அவர்களின் இல்லம்) என்னும் இடத்தில் அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையா நிறுவனத்தின் போசகர் கலாபூஷணம் திரு.மா.அனந்தராசன் (சமாதான நீதவான்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வவுனியாப் பல்கலைக்கழக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரை யாளருமாகிய திரு.விஜயநாதன் செந்தூரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்புரையை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன முன்னாள் தமிழ்த்துறைப் பணிப்பாளர் திரு.சி.வன்னிய குலம்(M.A) அவர்கள் நிகழ்த்தியிருந்தார். யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, யா/தேவரை யாளி இந்துக்கல்லூரி, யா/வதிரி வடக்கு மெதடிஸ்த மிடின் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றின் 2019, 2020 இல் கல்வி கற்று சித்தியெய்திய தரம் 05, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. திரு.விஜயநாதன் செந்தூரன் அவர்கள் மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்து, நினைவுப்பரிசில்களையும், பணப்பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்திருந்தார். வரவேற்புரையை நிறுவனத்தின் பொருளாளர் திரு.வி.கவிச்செல்வம் (ஆசிரியர்) அவர்களும், நன்றியுரையை நிறுவனத்தின் செயலாளர் திரு.ஐ.உதயரத்தினம் அவர்களும் நிகழ்ச்சித் தொகுப்பினை நிறுவனத்தின் தலைவர் திரு.க.வரதவேல் அவர்களும் நிகழ்த்தியிருந்தனர்.

தகவல் – கணபதிப்பிள்ளை வரதவேல்

அது ஒரு காலம் – 8

# நொச்சியடி வெட்டையும் கோரைப்புற்களும்

■ செல்லக்குட்டி கணேசன் ■

எமது கிராமத்தில் பல வெட்டைகள் (மைதானங்கள்) இருந்திருந்தாலும் “நொச்சியடி“ வெட்டைக்கு என்று ஒரு தனிச் சிறப்பு உண்டு. எமது கிராமத்தில் கல்வித்துறை. விளையாட்டுத் துறை ஆகிய இரண்டையும் எடுத்துக் கொண்டால் அவற்றில் அதி உச்சத்தைத் தொட்டவர்கள் அனைவரது பாதங்களும் இவ் வெட்டையில் பதியாமல் இருந்ததில்லை. இதனை மூன்றாம் பனையடியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வநாதன் (பாரதா கேவோலை) தனது தாயாரின் நினைவாக வெளியிட்டுள்ள நினைவு மலரில் (அவர்களின் பெயர்களை) பதிவு செய்துள்ளார். அவற்றுள் இன்றுள்ள தலைமுறையினரின் தந்தை, பேரன், பீட்டன், கொப்பாட்டன் என்று எல்லோரும் இருப்பார்கள். அவ்வாறு இவ்வெட்டையில் என்ன சிறப்பு இருக்கிறது என்றால் எமது முன்னவர்களின் பாதம் பதிந்த இடம் என்பதே தனிச்சிறப்பு. இவற்றை விடவும் சிறுவர்களாக விளையாடியவர்கள் அனை வரும் இயல்பாக விளையாடி, விளையாடி தங்களுக்குள் ஒரு திறமையை வளர்த்துக் கொண்டு, வயது வந்தவுடன் மனோகரா மைதானத்திற்குச் சென்று பெரியவர்களுடன் விளை யாடி தங்களை வளப்படுத்திக் கொண்டு எமது கழகத்திற்கு பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்ததோடு, தாங்கள் கல்விகற்ற பாடசாலைக்கு நல்ல பெயரை பெற்றுக் கொடுத்தார்கள். அது மட்டுமல்லால் ஊருக்கும் பெருமையை ஏற்படுத்தித் தந்தார்கள்.

அண்மையில் அவ்வெட்டைப் பகுதிக்கு சென்ற போது கோரைப்புற்கள் முளைத்து நிற்பதைக் கண்டதும் எனது சிறுபராயத்து நிகழ்வுகள் மேல் எழுந்தன. இப்புற்கள் ஆனது எமது ஊரில் இல்லை. இப்புற்களை ஊருக்கு கொண்டு வந்தவர்கள் நாங்களே. 70 பதுகளுக்கு முன்னர் (நாங்கள் சிறுவர்களாக இருந்த போது) இவ்வெட்டையில் ஒரு உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நாங்கள் எங்களுக்குள் நடாத்தி னோம். அதற்காக வெட்டையை சீர் செய்தோம். கோல் கம்பங் களுக்கு நல்ல பலமான பூவரசம் கதியாலை நட்டோம். வளைக் கும் நீளமான பூவரசங்கதியாலை வைத்து இழைக்கயிற்றினால் கட்டினோம். கோல் கம்பத்திற்கு பின்புறமாகக் கட்டுவதற்கு பழைய மீன் வலைகளை பயன்படுத்தினோம். இவ்வலைகளை சக்கோட்டைப் பகுதிக்குச் சென்று பெற்று வந்தோம். எல்லைக் கோட்டிற்கு சுற்றிவர கோரைப் புற்களை நடுவது என முடிவெடுத்தோம். இப்பபுற்கள் அல்வாய் வடக்கு சக்கோட்டைப் பகுதியில் அதிகமாக நிற்பதை அறிந்து அங்கு (நாங்கள்) சென்று எடுத்து வந்து எல்லைக் கோட்டிற்கு சுற்றிவர நடுகை செய்தோம். ஆச்சரியம் என்னவென்றால் இன்றும் அப்புற்கள் அங்கு முளைத்திருப்பது ஆகும். இப்புல்லின் கீழ் காணப்படு கிழங்குப் பகுதியானது முள்ளங்கியை நினைவுக்கு கொண்டு வரும். சிறு வித்தியாசம் முள்ளங்கி காய் நீளமானது. ஆனால் கோரைப் புல் கிழங்கானது வட்ட அல்லது கூம்பு வடிவமானது. இப்புல்லை எம்முடன் எடுத்துவர உதவிய பலரை நினைத்துப் பார்த்தேன். அவர்களில் சிலர் இன்று எம்முடன் இல்லை. இருப்பினும் அப்புற்கள் அவர்களின் நாமத்தை எங்களுக்கு நினைவூட்டிய படியே நிற்கின்றன.


**பரணீ புத்தகக்கூடம்**
**பரணீ அச்சகம்**
**ஜீவநதி வெளியீட்டகம்**

Baranee Book Lab
Baranee Printers
Jeevanathy Publisher

உங்களுக்கு தேவையான அனைத்து
வகையான கொப்பிகள், புத்தகங்கள்,
பேனைகள், பாடசாலை உபகரணங்களை
எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்கள், கல்வெட்டுகள், அழைப்பிதழ்கள்,
அஞ்சலி பிரசுரங்கள் என்பவற்றை
அழகான முறையில் அச்சிட
எம்மை நாடுங்கள்

நெல்லியடி மத்திய கல்லூரி வீதி
நெல்லியடி
07759919499



**சுந்தரவேல் வைத்தியசாலை**

SUNTHARAVEL MEDICAL
&
CONSULTING CENTRE
TIME : 7.00 AM TO 9.30PM

**Dr. வே.கணேசவேல்**
0776013616
கற்பகப் பிள்ளையார் வீதி
உரும்பிராய் வடக்கு
உரும்பிராய்